004 T/300/0004 R-25

# சோஷலிஸம்

மார்ச்
1986

3

சோவியத் மாசிகை

## தத்துவமும் நடைமுறையும்



# சோ. க. க.

# 27 வது

# காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986
(123)

A.27
3
300
T/300/0002

# சோஷலிஸம்

## தத்துவமும்
## நடைமுறையும்

**சோவியத்
சித்தாந்த
அரசியல்
பத்திரிகைகளின்
மாதாந்த
மஞ்சரி**

நொவஸ்தி
செய்தி
ஸ்தாபனத்
தயாரிப்பு

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7 லுள்ள சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றிய தூதரகத் தகவல் பிரிவின் தலைவர் வீ. ஆர்-குலாந்தா அவர்களால் கொழும்பு-10, 93, மாளிகாகந்த றோட், மருதானையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27வது காங்கிரஸ் | சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரசுக்கான அரசியல் அறிக்கை | |
| இன்றைய விவகாரங்கள் | சர்வதேச பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்காகவும் சமதையான ஒத்துழைப்புக்காகவும் | 03 |
| சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி: சோவியத் சமுதாயத்தின் முன்னணிப் படை | சோவியத் கம்யூனிட் கட்சி: மக்களின் கட்சி | 11 |
| | சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி: கேள்வி-பதில் | 16 |
| | சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி புள்ளி விபரங்கள் | 23 |
| மார்க்ஸியம்-லெனினியமும் எமது காலமும் | மிகையில் பொல்சாகோவ் நாடுகள் மத்தியில் சமாதானம்—இதுவே மார்க்ஸியக் குறிக்கோள் | 28 |
| | அலீஸ் அகமட் லெனின் பற்றிய சிந்தனைகள் | 34 |
| சமாதானம், படைக் குறைப்புக்கான வாய்ப்புக்கள் | வாதிம் ஸாக்லதின் சோவியத் சமாதான வேலைத்திட்டம்: அதன் சாராம்சமும் நடைமுறைப்படுத்தலும் முன்னேற்றமும் | 39 |
| வரலாறும் அனுபவமும் | மாயா குருமின் சோஷலிஸ சமத்துவமும் சமூக நீதியும் | 45 |
| சோஷலிஸமும் இன்றைய உலகும் | விடுதலைப்பெற்ற நாடுகளுடனான சோ. க. வின் ஒத்துழைப்புப் பாதை | 49 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரசுக்கான அரசியல் அறிக்கை

**சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரசுக்கு சோ.க.க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் மிகையில் கொர்பச்சேவ் சமர்ப்பித்த சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கையின் சுருக்கத்தை வாசகர்களுக்கு வழங்குகிறோம்.**

''சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரஸ் நாட்டின் வாழ்விலும் தற்கால உலகம் முழுவதிலும் கூர்மையான ஓர் திருப்புமுனையில் நடைபெறுகிறது'' என்று கட்சியின் காங்கிரசுக்குச் சமர்ப்பித்துள்ள அரசியல் அறிக்கையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் மிகையில் கொர்பச்சேவ் கூறியுள்ளார். ''சோவியத் யூனியன், 21-ம் நூற்றுண்டில் அது பிரவேசிக்கும்போது எவ்வாறு தோற்றமளிக்கும், சோஷலிஸத்தின் தோற்றப்பாடும் சர்வதேச அரங்கில் அதன் நிலைப்பாடுகளும் மனிதகுலத்தின் எதிர்காலமும் எவ்வாறு இருக்கும் என்பது பற்றி'' இக்காங்கிரஸ் விவாதிக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நமது நாடு கடந்து வந்துள்ள பாதையும் அதன் பொருளாதார, சமூக, கலாசார சாதனைகளும் மார்க்ஸிய-லெனினியக் கருத்தமைப்பின் ஜீவசக்தியை, சோவியத் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் உருப்பெற்றுள்ளவாறு சோவியத் சமுதாயத்தின் மிகப்பெரும் உள்ளாற்றலை நம்பகமாக ஊர்ஜிதம் செய்கின்றன. இந்த ஆண்டுகளின் போது சாதிக்கப்பட்டிருக்கும் அனைத்தையுமிட்டு நாம் நியாயமாகவே பெருமிதம் கொள்ளமுடியும்'' என்று அவர் சொன்னார்.

''சாதனைகள் பற்றி விதந்துரைக்கும் அதேசமயத்தில் எமது அரசியல், நடைமுறை நடவடிக்கைகளில் காணப்படும் குறைபாடுகள் பற்றி கட்சிக்கும் மக்களுக்கும் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் எடுத்துரைப்பது தனது கடமை என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.''

சமுதாயத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் எதிர்மறையான காரணிகளைச் சாத்தியமான அளவு துரிதமாக வெற்றிகொள்வதே இப்போதுள்ள முதன்மையான கடமை என்று குறிப்பிட்ட மிகையில் கொர்பச்சேவ், ''நிலவரம் உள்துறை விவகாரங்களில் மாத்திரம் ஓர் திருப்புமுனைக்கு வந்திருக்கவில்லை, அயல்துறை விவகாரங்களிலும் ஓர் திருப்புமுனைக்கு வந்திருக்கிறது'' என்று சொன்னார். ''நவீன உலகம் சிக்கலானது, பன்முகப்பட்டது, இயக்காற்றல்மிக்கது, ஒன்றுக்கொன்று போட்டிபோடும் போக்குகளையும் முரண்பட்ட மாற்றுவழிகளையும் ஆர்வங்களையும் நம்பிக்கைகளையும் கொண்ட உலகம் அது.''

''மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியினல் துவக்கிவைக்கப்பட்ட விமோசனப் புரட்சிகள் 20-ம் நூற்றண்டின் தோற்றப்பாட்டை நிர்ணயிக்கின்றன, எமது காலத்தின் முன்னேற்றம் மிகச் சரியாகவே சோஷலிஸத்துடன் இனங்காட்டப்படுகிறது'' என்று அவர் தொடர்ந்து சொன்னர். ''உலக சோஷலிஸம் ஆகவும் வளர்ச்சிபெற்ற பொருளாதாரத்தையும், கணிசமான அளவு விஞ்ஞானபூர்வ செல்வாதாரங்களையும் நம்பகமான அரசியல்—இராணுவ உள்ளாற்றலையும் கொண்ட வலிமைமிக்க சர்வதேச மெய்ப்பாடு ஆகும். அது மனிதகுலத்தில் மூன்றில் ஒன்றுக்கும் கூடுதலான பகுதியைக் கொண்டது; மனிதனதும் சமுதாயத்தினதும் அறிவுத்துறை மற்றும் தார்மீகச் செல்வத்தை டஜன் கணக்கான நாடுகளுக்கும் சகல வழிகளிலும் திறந்துவைக்கிறது. சோஷலிஸ நீதியின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட புதியதோர் வாழ்க்கைமுறை உருப்பெற்றுள்ளது; இதில் ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் இல்லை, சுரண்டுவோரும் சுரண்டப்படுவோரும் இல்லை. இதில் அதிகாரம் மக்களுக்கே உரியது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சமூக முன்னேற்றத்தின் போக்கு காலனி—விரோதப் புரட்சிகள், தேச விமோசன இயக்கங்கள், கணிசமான எண்ணிக்கையிலான நாடுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, டஜன் கணக்கான புதிய நாடுகளின் தோற்றம் ஆகியவற்றுடன் நெருக்கமாகக் கட்டுண்டுள்ளது. அரசியல் சுதந்திரத்தை வென்றெடுத்துள்ள இந்நாடுகள், பின் தங்கிய நிலைமையையும் வறுமையையும் சிலவேளைகளில் விரக்திமிக்க அவலத்தையும்—அவற்றின் அடிமைத்தனமான கடந்தகாலத்தின் துயரார்ந்த பிதுரார்ஜிதம் முழுவதையும்—வெற்றிகொள்வதற்காக கடுமையாகப் பாடுபட்டு வருகின்றன. ஒருகாலத்தில் ஏகாதிபத்தியக் கொள்கையின் உரிமையற்ற இலக்குகளாக இருந்த அவை தற்போது தாமாகவே வரலாற்றைச் சிருஷ்டிக்கின்றன,'' என்று மிகையில் கொர்பச்சேவ் சொன்னார்.

அவர், சமகால உலகின் முரண்பாடுகள் பற்றி விளக்கிக் கூறினார். அவர் குறிப்பிட்ட பெரும் முரண்பாடுகள் மத்தியில், இரு அமைப்புகளையும் சேர்ந்த நாடுகளுக்கிடையிலான உறவுகள், முதலாளித்துவ உலகத்தில் காணப்படும் உள்ளார்ந்த முரண்பாடுகள், உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான முரண்பாடுகளும் மற்றும் பலவற்றுடன் தொடர்புடையவையும் அடங்கும்.

''ஏகாதிபத்தியத்துக்கும் வளர்முக நாடுகள், மக்களுக்கும் இடையே புதிய, சிக்கல்மிக்க, தொடர்ந்து செயல்படுகின்ற முரண்பாடுகள் உருப்பெற்றுள்ளன,'' என்று இந்த அறிக்கை கூறுகிறது. முன்னைய காலனிகளும் அரைக் காலனிகளும் விமோசனமடைந்தமை முதலாளித்துவ அமைப்புக்கு அரசியல் மற்றும் சித்தாந்தவியல் ரீதியில் தொடுக்கப்பட்ட பலமான தாக்குதலாகும்.''

''முதலாளித்துவ அமைப்பு, தான் 19-ம் நூற்றாண்டில் எந்தத் தோற்றத்துடன் செயல்படத் தொடங்கியதோ—அதே தோற்றத்துடன் 20-ம் நூற்றாண்டின் முதல் அரைவாசிப் பகுதிக்குள்ளும் வியாபித்திருந்தது—அத்தோற்றத்துடன் தொடர்ந்தும் செயல்படவில்லை. மனிதகுலத்தில் பெரும்பான்மையினரைக் கொண்ட தேசங்களின் வாழ்வில், சமூக—பொருளாதார உருமாற்றங்களின் மெதுவான, கடுமையான ஆனால் நிறுத்த முடியாத போக்கு நடைபெற்று வருகிறது. பெருமளவிலான அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள இப்போக்கு, கணிசமான அளவு சிரமங்களையும் எதிரிட்டது.

''அரசியல் சூழ்ச்சிகள், பசப்புச் சொற்கள், நிர்ப்பந்தங்கள், இராணுவ அச்சுறுத்தல்கள், துன்புறுத்தி இணங்க வைப்பது மற்றும் புதிதாக விடுதலை பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் உள்விவகாரங்களில் அடிக்கடி நேரடியாகத் தலையீடு செய்வது ஆகியன மூலம், முன்னைய பொருளாதாரச் சார்பு உறவுகளை நிலைநிறுத்திக் கொள்வதில் முதலாளித்துவம் பல வழிகளில் வெற்றி கண்டிருக்கிறது. இதன் அடிப்படையில் நவகாலனியாதிக்கச் சுரண்டலின் ஆகவும் செம்மையாக்கப்பட்ட அமைப்பை உருவாக்குவதிலும் சரிநேர்ப்படுத்துவதிலும் வெற்றி கண்டுள்ளது. இதனால் நேர்ந்துள்ள விளைவுகள் துக்ககரமானவை, 200 கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்ட வளர்முக நாடுகள் உண்மையிலேயே, ஒட்டுமொத்த வறுமைநிலைப் பிராந்தியமாக மாறியுள்ளன. 1980-ம் ஆண்டுகளின் துவக்கத்தில், புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் நபர்வீத வருமானம், வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் நபர்வீத மெய் வருமானத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவானதாக இருந்தது.''

''கடந்த முப்பது ஆண்டுகளில். இந்த இடைவெளி குறுகலாகாமல், விரிவடைந்துள்ளது. மேலும் அது சாதாரணமாகவே ஒப்பீட்டளவிலான வறுமை நிலைப் பிரச்னையும் அல்ல. கல்வியறிவின்மையும் அவலமும், மிகமோசமான போஷாக்கின்மையும், பட்டினியும் வருந்தத்தக்க அளவில் சிசு மரணமும் லட்சோப லட்சம் மக்களைப் பாதிக்கும் கொள்ளை நோய்களும் இருந்து வருகின்றன.''

''இது நாகரிகமுற்ற மனிதகுலத்துக்குப் பேரவமானமாகும். அதற்கான குற்றவாளி ஏகாதிபத்தியமே. வரலாற்றுக் கண்ணோட்டத்திலிருந்து மாத்திரமல்ல, நம்ப முடியாத அளவு பின்தங்கிய நிலைமையின் பிதுரார்ஜிதத்தை விட்டுச் சென்ற அனைத்துக் கண்டங்கள் மீதுமான கலோனியல் சூறையாடலின் கண்ணோட்டத்திலிருந்து மாத்திரமல்ல, ஆனால் தற்கால நடைமுறைகளின் கண்ணோட்டத்திலிருந்தும் ஏகாதிபத்தியமே குற்றவாளி. அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனங்கள் கடந்த பத்தாண்டுகளில் வளர்முக நாடுகளிலிருந்து கறந்தெடுத்துள்ள இலாபம், அவற்றின் உட்பாய்வுகளைவிட நான்கு மடங்கு கூடுதலானதாகும். லத்தீன் அமெரிக்காவிலும் கரிபியனிலும் இதே காலகட்டத்தின்போது அமெரிக்க ஏகபோகங்கள் அடைந்துள்ள இலாபங்கள், அவற்றின் உட்பாய்வுகளைவிட எட்டுத் தடவைகளுக்குக் கூடுதலானதாகும்.''

'ஏகாதிபத்திய அமைப்பு பெருமளவுக்கு, வளர்முக நாடுகளைச் சூறையாடித்தான் இன்னமும் வாழ்கிறது, அவற்றை அறவே ஈவிரக்கமில்லாமல் சுரண்டுவது மூலமே வாழ்ந்து வருகிறது என்று கூறினால், அது மிகையல்ல. வடிவங்களும் முறைகளும் மாறிவிடுகின்றன, ஆனால் சாராம்சம் அப்படியே இருக்கிறது. உதாரணமாக, அமெரிக்காவில் தேசிய வருமானத்தின் கணிசமான பகுதி, இந்த மார்க்கங்களிலிருந்தே வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வளர்முக நாடுகள் ஏகாதிபத்திய நாடுகள் அனைத்தினாலுமே சுரண்டப்படுகின்றன. என்றபோதிலும், அமெரிக்க ஏகாதிபத்தியம் அவற்றின் மீது சிறிதளவேனும் கவனம் செலுத்தாமல் இச் சுரண்டலை மேற்கொள்கிறது என்பதில் சந்தேகமில்லை. சமன்படுத்த முடியாத செலாவணியும் சமதையற்ற வர்த்தகமும் வட்டி வீதங்களில் செப்படி வித்தையும் துஷ்பிரயோகமும்—ஆகிய பன்னாட்டு நிறுவனங்களின் உறிஞ்சிகள் யாவும் ஒரே நோக்கத்துக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவை பெரும்பாலானவற்றுக்கு வறுமையையும் அவல நிலையையும் அதிகரிக்கின்றன, ஏனையவற்றில் செல்வத்தை அதிகரிக்கின்றன; முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தில் ஒருமுகப்படுத்தலை அதிகரிக்கின்றன.''

''வளர்முக நாடுகளின் அவலநிலை பாரியதோர் உலகளாவியப் பிரச்னையாகும். ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் மோதல்கள் பலவற்றுக்கான உண்மையான ஊற்றுக்கால் இதுவேயன்றி வேறெதுவுமல்ல. ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆளும் வட்டாரங்கள் தம்முடைய நவகாலனியாதிக்கக் கொள்கையையும் உலகளாவிய அபிலாஷைகளையும் எண்பித்துக் காட்டுவதற்காக ''மாஸ்கோவின் கரம்'' பற்றி எவ்வளவுதான் கூக்குரலிட்டாலும் உண்மைநிலை இதுதான்.''

''கடன் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள். வளர்முக நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் வெளியேற்றப்படும் இலாபங்களுடன் சேர்ந்து, திரட்டப்பட்ட கடன் ஒரேயொரு விஷயத்தையே பொருள்படுத்துகிறது; இந்நாடுகளின் வளர்ச்சி வாய்ப்புகள் அருகிவிட்டுள்ளன; இது ஏற்கனவே மோசமாகியுள்ள சமூக, பொருளாதார மற்றும் பிற பிரச்னைகள் மேலும் உக்ரமடைவது தவிர்க்க முடியாதது என்பதையே பொருள்படுத்துகின்றது.''

''தற்போதுள்ள நிலைமைகளில், இந்நாடுகள் தமது கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாது என்பது வாஸ்தவமே. இதற்கு நீதியான தீர்வு காணவிட்டால் இந்த நிலைமை சர்வதேச அரங்கில் மிகவும் கொடிய சமூக—பொருளாதார, அரசியல் பின்விளைவுகளைக் கொண்டு வரும். இதில் காணப்படும் ஆபத்து குறித்து ஏகாதிபத்திய வட்டாரங்களுக்குத் தெரியாது என்று கூறுவது தவறு, ஆனால் அவற்றின் அக்கறை முழுவதும் ஒரேயொரு விஷயத்துக்கே இட்டுச் செல்கிறது—வளர்முக நாடுகளின் மக்களைச் சுரண்டுவது, மிகக் குரூரமாகச் சுரண்டுவது மூலம் தற்போதைய செழுமைப்படுத்தல் முறையை எவ்வாறு பேணிக்காப்பது என்ற விஷயத்துக்கே இட்டுச் செல்கிறது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மற்றுமொரு விஷயமும் நிச்சயமானது. இந்த நாடுகளின் டிரில்லியன் அளவுள்ள கடனுக்கும் கடந்த பத்து ஆண்டுகளில் அமெரிக்க இராணுவச் செலவின் டிரில்லியன் அளவு வளர்ச்சிக்கும் இடையே மறுதலிக்க முடியாத காரிய நோக்குள்ள தொடர்புள்ளது. வளர்முக நாடுகளிலிருந்து சுமார் 200 பில்லியன் டாலர் ஆண்டுதோறும் கறக்கப்படுவதும், சமீப ஆண்டுகளில் அமெரிக்காவின் இராணுவ பட்ஜெட் ஏறக்குறைய இதேயளவாக இருப்பதும் தற்செயலானதல்ல. எனவே தான், இராணுவவாதம் நவ—கலோனியல் மிகைச் சுரண்டலின் அமைப்பைப் பேணிக்காப்பதிலும் இறுக்கமாக்குவதிலும் நேரடியாகவே நம்பிக்கை வைத்து வருகிறது,'' என்று சோ.க.க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் சொன்னார்.

நாட்டின் உள்துறை வாழ்க்கை பற்றி இந்த அறிக்கை விளக்கும் பகுதியில், சோவியத் யூனியனின் சமூக—பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கமுடைய விஷயங்களுக்கு மிகையில் கொர்பச்சேவ் கூடுதல் கவனம் செலுத்தினார். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தற்போதைய வேலைத்திட்டம் (1961) அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் முடிவடைந்துள்ள இருபத்தைந்து ஆண்டுகளில் தேசிய பொருளாதாரத்தின் நிலையிருப்புச் சொத்துக்கள் ஏழு தடவைகளுக்கும் கூடுதலாக அதிகரித்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். ''தேசிய வருமானம் ஏறத்தாழ 300 சதவீதமும் தொழில்துறை உற்பத்தி 400 சதவீதமும் விவசாய உற்பத்தி 70 சதவீதமும் அதிகரித்துள்ளது நபர்வீத மெய்வருமானம் 160 சதவீதமும் சமூகப் பயனீட்டு நிதிகள் (மக்களுக்கான இலவச மருத்துவ வசதி, நானாவிதமான கல்வி, அரச—ஓய்வூதியங்கள், மாணவர் மானியங்கள் போன்றவை இதிலிருந்தே கொடுக்கப்படுகின்றன) 400 சதவீதத்துக்கும் கூடுதலாகவும் அதிகரித்துள்ளன. கடந்த 25 ஆண்டுகளில் சோவியத் யூனியனில் 540 லட்சம் தட்டு மனைகள் கட்டப்பட்டுள்ளன (சோவியத் ஒன்றியத்தில் அரசாங்கத்தினால் கட்டப்படும் தட்டு மனை வீடுகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன). சர்வதேச நடுநிலைக் கல்விக்கு மாறிச் செல்வது பூரணப்படுத்தப்பட்டிருக்கிறது. உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.''

''அதேசமயம், பொருளாதார வளர்ச்சி விதங்கள் வீழ்ச்சி கண்டதுடன், 1970-ம் ஆண்டுகளின்போது பொருளாதாரத்தில் சிரமங்கள் பெருகத் தொடங்கின,'' என்று அவர் சுட்டிக்காட்டினார். ''பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் சாதகமற்ற போக்குகளை உறுதியாகப் பின்னடையச் செய்வதும் அதற்குத் தக்கமுறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்காற்றலைக் கொடுப்பதும்தான் இன்று கட்சியினதும் மக்களனைவரினதும் தலையாய கடமையாகும்,'' என்று மிகையில் கொர்பச்சேவ் சொன்னார்

இந்த நூற்றாண்டின் இருபத்தில் முடிவடையும் காலகட்டத்தில் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் பிரதான இலக்குகள் குறித்து கொர்பச்சேவ் விளக்கிக் கூறினார். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் தேசிய வருமானத்தை ஏறக்குறைய இரண்டு மடங்காகவும் உற்பத்தி உள்ளாற்றலை இரட்டிப்பாக்கவும் நாடு எண்ணங்கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

''இப்போக்கின் பின்னணியிலுள்ள முக்கிய காரணிகள் விஞ்ஞான—தொழில்நுட்பவியல் முன்னேற்றமும் சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளை அடிப்படையிலேயே உருமாற்றுவதும் ஆகும். கட்டமைவு மற்றும் முதலீட்டுக் கொள்கை மாற்றப்படவுள்ளது. இயந்திர நிர்மாணம் முதன்மையான வீதத்தில் விருத்தி செய்யப்படும். சகல தொழில்களும் தொழில்நுட்ப ரீதியில் மறுசாதனப்படுத்தப்படவுள்ளன. விஞ்ஞான, தொழில்நுட்பவியல் வளர்ச்சி முயற்சிகளின் திறன் உயர்த்தப்படவுள்ளது. பொருளாதார பொறியமைவு முழுவதும் தரமுயர்த்தப்படவுள்ளது.

''நாட்டின் உணவுத் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யும் பொருட்டு பண்ணை உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை இரண்டு மடங்குக்குக் கூடுதலாக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இக்கடமை சாத்தியமான அளவு குறுகிய காலத்தில் தீர்க்கப்படவுள்ளது. உள்ளியல்பான தொழில்நுட்பவியல்களை பெருவீதத்தில் பிரயோகம் செய்வதில்தான் வெற்றிகான திறவுகோல் உள்ளது. உணவு இருப்புக்களைப் பெருக்கும் ஆகவும் உடனடியான மார்க்கம் பயிர் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களில் நட்டத்தைக் குறைப்பதுதான்,'' என்று கொர்பச்சேவ் சொன்னார்.

''இந்த நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்னர், மக்களின் நலவாழ்வை தராதியில் புதிய மட்டத்திற்கு உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது,'' என்று மிகையில் கொர்பச்சேவ் சொன்னார். ''அடுத்துவரும் பதினைந்து ஆண்டுகளில், வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்படும் செல்வாதாரங்களின் அளவு இரட்டிப்பாக்கப்படவுள்ளது. குறிப்பாக, 2000-வது ஆண்டுக்குள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனிப்பட்ட தட்டு மனையோ அல்லது வீடோ வழங்கப்படும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக சோவியத் யூனியனில் பிரம்மாண்டமான அளவு உரு மாற்றப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கொர்பச்சேவ் சொன்னார். "அதன் பெறுபேறுகள், உலக நாகரிகத்தைச் செழுமைப்படுத்தியுள்ள சோஷலிஸத்தின் உன்னதமான ஆதாரமாகும். தேசிய ஒடுக்குமுறையும் அசமத்துவத்தின் நானாவிதமான வடிவங்களும் வகைகளும் ஒழித்துக் கட்டப்பட்டிருக்கின்றன. இனங்கள் மத்தியில் அழிக்க வொண்ணாத நட்புறவும் தேசிய கலாசாரம் மற்றும் அனைத்து மக்களதும் கௌரவத்துக்குமான மரியாதையும் ஆழ வேரூன்றியுள்ளன. சோவியத் ஒன்றியத்தில் தேசிய உறவுகளின் மேலும் வளர்ச்சிக்காக கட்சி தொடர்ந்தும் பணிபுரியும்," என்று மிகையில் கொர்பச்சேவ் வலியுறுத்தினார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சோஷலிஸ அமைப்பின் ஜனநாயக இயல்பை அதிகரிப்பதில் இடையறாது கவனம் செலுத்தி வருகிறது. கட்சி வேலைத்திட்டத்தின் புதிய நகல் பதிப்பில் இக் கடமைகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளன; இவை, மக்களின் சோஷலிஸ சுய—ஆட்சியை முரணின்றியும், தளராமலும் முன்னெடுத்துச் செல்வதற்கு அறைகூவல் விடுக்கின்றன. சோவியத் ஜனநாயகத்தை விருத்தி செய்வதையும் செம்மையாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட விஷயங்கள் அறிக்கையின் ஒரு பகுதியில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

"நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு அடிநாதமாகவுள்ள கடமைகள் உலக அரங்கில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வியூலோபாயத்தையும் நிர்ணயிக்கின்றன," என்று மிகையில் கொர்பச்சேவ் சொன்னார். "அதன் முக்கிய நோக்கம் தெள்ளத் தெளிவானது—நீடித்த சமாதானம் மற்றும் சுதந்திர நிலைமைகளில் பணிபுரியும் வாய்ப்பை சோவியத் மக்களுக்கு உறுதிப்படுத்துவதே இந்நோக்கம், இன்றைய நிலைமைகளில் அதை நிறைவேற்றுவது என்றால், யாவற்றுக்கும் மேலாய், நியூக்லியர் யுத்தத்துக்கான பொருளாயத ஆயத்தங்களை நிறுத்துவது என்றே பொருள்."

இந்த நூற்றாண்டு முடிவதற்கு முன்னர் வெகுஜனப் பேரழிவு ஆயுதங்களை முழுமையாக ஒழித்துக்கட்டுவது குறித்து சோவியத் யூனியன் சமீபத்தில் முன்வைத்த ஸ்தூலமான வேலைத்திட்டத்தை மிகையில் கொர்பச்சேவ் நினைவுபடுத்தினார். "யுத்தத்தை அரசுகளுக்கிடையிலான அரசியல், பொருளாதார முரண்பாடுகளையும் சித்தாந்த வியல் பிணக்குகளையும் தீர்ப்பதற்குரிய ஒரு கருவி என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை சோஷலிஸம் திட்டவட்டமாக நிராகரிக்கிறது. ஆயுதங்களும் வன்செயலும் இல்லாத உலகமே எமது குறிக்கோள்,'' என்று அவர் சொன்னார்.

''உருப்பெற்றுள்ள ஸ்தூலமான நிலைமைகளில், முதலாளித்துவத்துக்கும் சோஷலிஸத்துக்கும் இடையிலான மோதல் சமாதானபூர்வ போராட்டம் மற்றும் சமாதானபூர்வ போட்டியின் வடிவங்களில் மாத்திரமே பிரத்தியேகமாக முன்செல்ல முடியும்,'' என்று சோ. க. க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் வலியுறுத்தினார்.

சமாதானத்தை உறுதி செய்யும் பாரிய பிரச்னைகள் குறித்து பேசிய மிகையில் கொர்பச்சேவ், காலம் பிந்திப் போவதற்கு முன்னர், புறவெளிக்கு ஆயுதப் போட்டி பரவாமல் இருப்பதை உத்தரவாதம் செய்யும் எதார்த்தமான நிலையைக் காண்பது இன்றியமையாததாகும் என்று வலியுறுத்தினார்.

யுத்த ஆபத்துத் தளங்கள் எந்தப் பிராந்தியத்தில் தோன்றினாலும் அவற்றை ஒழித்துக் கட்டுவதற்கான அவசியத்தை இந்த அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது. ''அண்மிய மற்றும் மத்தியக் கிழக்கிலும் மத்திய அமெரிக்காவிலும் தென் ஆபிரிக்காவிலும் கோளின் கொந்தளிப்பான நிலைகள் எல்லாவற்றிலும் மோதல் நிலைமைகளைத் தணிப்பதற்கான கூட்டுத் தேடல்களுக்கு ஜீவசக்தியளிப்பதை நாம் ஆதரிக்கிறோம்,'' என்று கொர்பச்சேவ் சொன்னார்.

ஜனவரி 15-ம் திகதியிடப்பட்ட சோவியத் அறிக்கைக்கு ஜனாதிபதி ரீகனிடமிருந்து கிடைத்துள்ள பதிலை சோ. க. க, மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் அவையோருக்குச் சமர்ப்பித்தார். இப்பதில் உத்வேகமூட்டும் அபிப்ராயங்களையும் விதிகளையும் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் இந்த ஸ்தூலமான குறிப்புரைகள் ஒதுக்கங்களுக்குள் மூழ்கடிக்கப்படுகின்றன; மேலும் நானாவிதமான ''நிபந்தனைகள்'' படைக்குறைப்பின் ஜீவாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு முட்டுக்கட்டை போடுகின்றன. ''அமெரிக்க ஜனாதிபதியின் கடிதத்தில், நியூக்லியர் ஆபத்தைத் தடுத்து நிறுத்தும் தலையாய பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் மெய்யான பணியில் ஈடுபடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கான அமெரிக்கத் தலைமையின் தீவிரமான தயார்நிலையைக் காண்பது கடினம்'' என்று மிகையில் கொர்பச்சேவ் சுட்டிக்காட்டினார்.

சோ.க.க.வின் 27-வது காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசியல் அறிக்கை, சர்வாம்சமும் தழுவிய சர்வதேசப் பந்தோபஸ்து அமைப்பை உருவாக்குகின்ற கருத்தை முன்வைக்கிறது. அத்தகைய அமைப்பு குறித்த வாசகத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை கோட்பாடுகள் இராணுவ, அரசியல், பொருளாதார மற்றும் மனிதாபிமானத் துறைகளில் ஸ்தூலமான நடவடிக்கைகள் பலவற்றை உள்ளடக்குகின்றன.

நியூக்லியர் வல்லரசுகள் ஒருவருக்கு ஒருவர் எதிராகவும் அல்லது மூன்றாவது நாடுகளுக்கு எதிராகவும்—நியூக்லியர் மற்றும் சம்பிரதாய—யுத்தம் செய்வதைக் கைதுறப்பதும், புறவெளியில் ஆயுதப் போட்டியைத் தடுப்பதும் சகல நியூக்லியர் ஆயுதப் பரிசோதனைகளையும் நிறுத்துவதும் அத்தகைய ஆயுதங்களை முழுமையாக அழித்துவிடுவதும், இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்வதும் அழித்துவிடுவதும் ஏனைய வெகுஜனப் பேரழிவு ஆயுதங்களை விருத்தி செய்வதைக் கைதுறப்பதும், இராணுவக் கூட்டணிகளைக் கலைத்துவிடுவதும், இதற்கு முன்னோடிக் கட்டமாக இராணுவக் கூட்டணிகளை விஸ்தரிப்பதையும் புதியவற்றை உருவாக்குவதையும் கைதுறப்பதும் இராணுவத்துறையில் மேற்கொள்ளத்தக்க ஸ்தூலமான நடவடிக்கைகளில் பாரியவையாகும்.

அரசியல் துறையில், இக்கோட்பாடுகள் ஒவ்வொரு மக்களும் தமது சொந்த வளர்ச்சி மார்க்கங்களையும் வடிவங்களையும் சுயாதீனமாக தெரிவுசெய்து கொள்வதற்குரிய உரிமைக்கு மரியாதை செலுத்துவதையும் சர்வதேச நெருக்கடிகள், மோதல்களுக்கு நீதியான அரசியல் தீர்வு காண்பதையும் நாடுகளுக்கிடையே நம்பிக்கையைப் பெருக்கும் நோக்கத்துடன் நடவடிக்கைகளை வகுத்துரைப்பதையும் முன்வைக்கின்றன.

பொருளாதாரத் துறையில், புதிய உலகப் பொருளாதார நியதியை ஸ்தாபிப்பதையும் சர்வதேச நடைமுறையிலிருந்து பாரபட்சத்தின் சகல வடிவங்களையும் நீக்குவதையும், உலக சமாஜத்தின் பரிந்துரைகளில் நேரடியாக முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படாத பட்சத்தில், பொருளாதாரத் தடைகள் பற்றிய கொள்கையைக் கைதுறப்பதையும் ஏனைய நடவடிக்கைகளையும் யோசனையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. மனிதநேயத் துறையில், இனச்சங்காரமும் இனவொதுக்கலும் பூண்டோடு அழிக்கப்பட வேண்டும், மக்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதிலும் சர்வதேச ஒத்துழைப்பு வியாபிக்கப்பட வேண்டும் என்பது போன்ற இன்னோரன்ன பிளவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

''இக்கோட்பாடுகளால் வழிகாட்டப்படுவது மூலம் சமாதான சகவாழ்வை அரசுகளுக்கிடையிலான உறவுகளில் அதியுயர் கோட்பாடாக மாற்றுவது சாத்தியமாகும். உலக சமாஜத்தின் நாடுகளது தலைவர்களுக்கிடையே நேரடியாகவும் திட்டமிட்ட அடிப்படையிலும் இருதரப்பு, பலதரப்புப் பேச்சுக்களை நடத்துவதற்கான துவக்க நிலையாகவும் ஒருவித வழிகாட்டு நெறியாகவும் இக்கோட்பாடுகள் மாறமுடியும் என்பது எனது கருத்தாகும்'' என்று மிகையில் கொர்பச்சேவ் சொன்னார். இது தொடர்பாக, ஐ. நா. பந்தோபஸ்து சபையின் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் நாடுகளின் தலைவர்களது வட்டமேஜை மகாநாட்டினால் ஏற்படக்கூடிய பயன் குறித்து கொர்பச்சேவ் கருத்து தெரிவித்தார்—இம்மகாநாடு சமாதானத்தை வலுப்படுத்துவதற்காக எவற்றையெல்லாம் செய்யமுடியும், எவற்றையெல்லாம் செய்யவேண்டும் என்பதை விவாதிக்க முடியும்.

பொருளாதாரப் பந்தோபஸ்துப் பிரச்னைகள் குறித்த உலகக் காங்கிரஸ் ஒன்றை எதிர்காலத்தில் கூட்டும் கருத்தையும் இந்த அறிக்கை முன்வைக்கிறது; இக்காங்கிரஸில் உலக பொருளாதார உறவுகள் சம்பந்தமான சகல விஷயங்களையும் சாதிப்பது சாத்தியமானதாக இருக்கும்.

இந்த அறிக்கையில் கட்சி விஷயங்கள் பற்றி கூறப்பட்டுள்ள பகுதியில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இப்போது ஒருகோடி தொண்ணூறு லட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கட்சி ஸ்தாபனமும் கூட்டுத்துவக் கோட்பாட்டைக் முரணின்றி நடைமுறைப்படுத்துவதன் அவசியம், விமர்சனம் மற்றும் சுயவிமர்சனத்தை ஊக்குவித்தல், பொய்ப் புரட்டல்களை அகற்றுவதற்கு முயற்சிகளைத் தீவிரமாக்குதல் ஆகியவற்றின் அவசியம், பாரிய கல்வித்துறை என்ற வகையில் தனிநபருடன் பணியாற்ற வேண்டியதன் முக்கியத்துவம் என்பனவற்றையும் இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வேலைத்திட்டத்தின் நகல் புதிய பதிப்பு. கட்சி விதிகளின் நகலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியன பற்றி நடை பெற்ற விவாதத்தின் பெறுபேறுகள் குறித்து எடுத்துக் கூறிய கொர்பச்சேவ் வேலைத்திட்டத்தின் முடிவுகள், விதிகளையும் கட்சி விதிகளையும் பரவலான முறையில் அங்கீகரிப்பதை வலியுறுத்தினார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சோஷலிஸத்தின் அளப்பரிய உள்ளாற்றல்களிலிருந்து பரந்த வெகுஜனங்களின் உயிர்த்துவமுள்ள படைப்பாக்க முயற்சிகளிலிருந்து தனது வலிமையைப் பெறுகிறது. வரலாற்றின் சிக்கல் வாய்ந்த திருப்புமுனைகளின்போது முன்னேற்றத்தின் சரியான மார்க்கங்களைக் காணவும் லட்சோப லட்சம் உழைக்கும் மக்களுக்கு எழுச்சியூட்டி, அணிதிரட்டவும் ஒழுங்கமைக்கவும் ஆன தனது ஆற்றலை லெனினியக் கட்சி பல தடவை வெளிக்காட்டியுள்ளது. புரட்சியின்போதும், அமைதிபூர்வ ஆக்க முயற்சிகளின் ஆண்டுகளிலும் யுத்த காலத்தின் சோதனை வேளைகளிலும் சிரமம் மிக்க யுத்த பிற்கால கட்டத்திலும் இவ்வாறுதான் நடந்தது. எதிர்காலத்திலும் கூட இவ்வாறுதான் இருக்குமென நாம் நம்புகிறோம் என்று சோ.க.க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் தோழர் மிகையில் கொர்பச்சேவ் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய விவகாரங்கள்

# சர்வதேச பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்காகவும் சமதையான ஒத்துழைப்புக்காகவும்

"நாடுகளின் சர்வதேச பொருளாதாரப் பந்தோபஸ்து: சர்வதேச பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கு முக்கியமான நிபந்தனை" என்ற சோவியத் அரசாங்கத்தின் அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர்—நாயகத்துக்கு சோவியத் ஒன்றியத்தின் அயல்துறை அமைச்சர் எட்வர்டு செவர்த்னத்ஸே எழுதியுள்ள கடிதம் ஒன்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் வாசகம் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரபூர்வ தாக்கீதாக வெளியிடப்பட்டுள்ளது.

## நாடுகளின் சர்வதேச பொருளாதாரப் பந்தோபஸ்து: சர்வதேச பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கு முக்கியமான நிபந்தனை

*(சோவியத் அரசாங்கத்தின் அறிக்கை)*

சர்வதேச பொருளாதார உறவுகளை மாமூலாக்குவதும், எந்தவிதமான பாரபட்சத்திற்கும் இடமளிக்காமல் நாடுகள் மத்தியில் சமதையான வர்த்தக, பொருளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பு களை ஸ்தாபிப்பதும், நாடுகளின் பொருளாதாரப் பந் தோபஸ்தை உறுதி செய்வதுமான கடமைகள் இன்றைய சர்வதேச நிலைமையில் மேன்மேலும் முக்கியமானவை யாகவும் அதியவசரமானவையாகவும் மாறி வருகின்றன.

சர்வதேச பொருளாதாரப் பந்தோபஸ்து பற்றி சோவியத் யூனியன் சமர்ப்பித்த யோசனையை ஐ. நா. பொதுச் சபையின் 40-வது கூட்டத் தொடர் அங்கீ கரித்துள்ளது; உலக சமாஜம் இக் கடமைகளின் முக்கியத்து வத்தையும் அதியவசரத் தன்மையையும் அங்கீகரித்திருப் பதற்கும், சர்வதேச பொருளாதார உறவுகளை மேம் படுத்துவது மற்றும் ஜனநாயகமாக்குவதற்கான பெரும் பான்மையான ஐ. நா. உறுப்பு நாடுகளின் முயற்சிக்கும் இது ஒரு வெளிப்பாடாக மாறியுள்ளது.

இந்த ஐ. நா. தீர்மானம் சர்வதேச இடைத் தொடர்பு பற்றிய ஆதாரக் கோட்பாடுகளில் ஒன்றை சட்டரீதியாக்கியுள்ளது. பொருளாதாரத் துறையில் ஐ. நா. ஸ்தாபனத்தின் செயல்பாடுகளுக்கான ஓர் புதிய முக்கியமான துறையைத் திறந்துவைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் குறிக்கோள்களை நடை முறைப்படுத்துவது, சமாதானத்தை வலுப்படுத்துவதிலும் சர்வதேசப் பந்தோபஸ்து மற்றும் நாடுகள் மத்தியில் பொருளாதார ஒத்துழைப்பின் வளர்ச்சியை உறுதிப்படுத்து வதிலும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பாத்திரத்தை அதிகரிப்பது என்ற தனது முரணற்ற போக்கினால் வழி காட்டப்படும் சோவியத் அரசாங்கம், இது தொடர்பாக பின்வருவனவற்றைக் கவனத்திற்குக் கொண்டு வருவது இன்றியமையாததெனக் கருதுகிறது;

1. சர்வதேச பொருளாதார உறவுகளில் முக்கிய மான முதலாளித்துவ நாடுகள் கடைப்பிடித்துவரும் போக்கின் காரணமாக, சர்வதேசப் பொருளாதாரச் சூழல் கூர்மையாக மோசமடைந்து வருவதையும் உலகப் பொருளாதார பந்தங்களில் நெருக்கடி இயல்நிகழ்வு மேலும் அதிகரிப்பதையும் நாடுகள் மத்தியில் வாணிப, பொருளாதார, நிதி, விஞ்ஞான—தொழில்நுட்ப உறவு கள் ஸ்திரமற்றதாவதையும் வளர்முக நாடுகளின் பொரு ளாதார நிலை மோசமடைவதையும் சமீப ஆண்டுகள் கண்டு வந்துள்ளன. சர்வதேச உறவுகளை மேம்படுத்துவதும் சமதையான, ஜனநாயக அடிப்படையில் அவற்றை மறு கட்டமைப்பு செய்வதுமான போக்குக்கு முட்டுக்கட்டை போடப்பட்டுள்ளது. நாடுகளின் பொருளாதாரப் பந் தோபஸ்து அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்றத்தை உக்கிரமடையச் செய்யவும் சர்வ தேசப் பிரச்னைகளுக்கு இராணுவ வலிமை மூலம் தீர்வு காணவுமான பாதை உலகப் பொருளாதாரத்தின் மாமூலான வளர்ச்சிக்கும் சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கும் பிரதான முட்டுக்கட்டையாக உள்ளது. ஆயுதப் போட்டியை, யாவற்றுக்கும் மேலாக நியூக்லியர் ஆயுதங்களின் போட்டியை தூண்டிவிடுவதும் சமூக, பொருளாதார வளர்ச்சித் தேவைகளை தியாகம் செய்து விட்டு புறவெளியை இராணுவமயமாக்கும் அபாயகரமான திட்டங்களும் மிகப் பெரும் செல்வாதாரங்களைச் சூறையாடுகின்றன.

விஞ்ஞானம், தொழில்நுட்பவியலில் மனிதகுலம் ஈட்டியுள்ள சாதனைகளை இராணுவ நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதும், நாடுகளின் சமூக—பொருளாதார வளர்ச்சியைச் சிக்கலாக்குகிறது; சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பிணைப்புக்களை உருக்குலைப்பதில் முடிகிறது; பொருளாதாரத்துறை உள்ளிட சர்வதேச உறவுகளின் தொகுப்பு முழுவதன் மீதும் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது.

சமத்துவம் மற்றும் பரஸ்பரம் பயனுள்ள பொருளாதார ஒத்துழைப்புக்குக் குழிபறிப்பதும், சர்வதேச பொருளாதாரத் தொடர்புகளை சுயாதிபத்திய நாடுகள் மீது நிர்பந்தம் செலுத்துவதற்கும் அவற்றின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதற்கும் பயன்படுத்துவதும், புதிதாகத் தோன்றிய நாடுகளின் சுயாதீனமான பொருளாதார, சமூக வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதும், பன்னாட்டு நிறுவனங்களும் வங்கிகளும் இந்நாடுகளைச் சுரண்டுவதற்கு உத்வேகமளிப்பதும் ஆன போக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நடைமுறையில் உள்ள பொருளாதார உடன்படிக்கைகளை ஒருதலைப்பட்சமாக ஒழித்துக் கட்டுவது, தொழில்நுட்பவியல் தடைகளை விதிப்பது, வர்த்தகம், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் பாரபட்சமான நடவடிக்கைகளை எடுப்பது போன்ற முறைகள்—ஐ. நா. வின் கோட்பாடுகளுக்கு இசைவுபடாத முறைகள்—நாடுகள் மத்தியிலான பொருளாதார உறவுகளில் பகிரங்கமாகவே நிலைநிறுத்தப்பட்டு வருகின்றன.

அத்தகைய செயல்கள் சர்வதேச பொருளாதார உறவுகளில் பதற்றம் மற்றும் அவநம்பிக்கைச் சூழலை உருவாக்குகின்றன; உலகப் பொருளாதாரத்தையும் வர்த்தகத்தையும் சீர்குலையச் செய்கின்றன; அதன் சட்டரீதியான ஆதாரத்தளத்துக்குக் குழிபறிக்கின்றன; சமதையான, ஜனநாயக அடிப்படையிலான ஓர் புதிய சர்வதேசப் பொருளாதார நியதியை ஸ்தாபிப்பதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மேற்குலகிற்கான வளர்முக நாடுகளின் வெளிக் கடன் பற்றிய பிரச்னை சமீப ஆண்டுகளில் மிகப்பெரும் முனைப்புத்தன்மையைப் பெற்றுள்ளது. கடன்கள் மீதான வட்டி கொடுப்பனவு வளர்முக நாடுகளிலிருந்து நிதி செல்வா தாரங்களை விரைவாக உறிஞ்சி எடுப்பதற்கு இட்டுச் செல்கிறது. புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் பொருளாதாரத்தை உயிரோட்டமற்றதாக்குகிறது. இச்செல்வாதாரங்கள் யாவும் ஏகபோகங்களைச் செழுமைப்படுத்துகின்றன, மேலை நாடுகளின் வரவு-செலவுப் பற்றுக்குறைகளுக்கும் இராணுவ வேலைத்திட்டங்களுக்கு நிதியீடு செய்வதற்கும் செலவழிக்கப்படுகின்றன.

வெளிக்கடன் பற்றிய பிரச்னை, மேற்கு நாடுகளுடன் வளர்முக நாடுகள் கொண்டுள்ள உறவுகளின் ஒரு பகுதியாகும்; அதன் மெய்யான தீர்வு, சர்வதேச பொருளாதார உறவுகளை சமதையான, சமத்துவமான, ஜனநாயக அடிப்படையில் மறுகட்டமைப்பு செய்யாமல் சாத்தியமாகாது. கடன்கள் மற்றும் தவணைக் கடன்கள் மீதான வட்டி வீதங்களைக் குறைப்பதும் நாணய வீதங்களை ஸ்திரமாக்குவதும் வர்த்தகத்தில் பாதுகாப்புவாதத்தை நிராகரிப்பதும் சர்வதேச நிதி அமைப்பை (சகல நாடுகளதும் நலன்களைக் கணக்கில் எடுப்பது மற்றும் சர்வதேச நிதி அமைப்பின் கட்டமைப்புக்குள் செயல்படும் நிதி நிறுவனங்களை ஜனநாயகமயமாக்குவதுடன்) மறுகட்டமைப்பு செய்வதும் அந்நிய கடன் பற்றிய பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு இன்றியமையாத நிபந்தனையாகும். சுயாதிபத்திய நாடுகளின் மீது நிதிரீதியான நிர்ப்பந்தத்தைப் பயன்படுத்துவதற்கும், அவற்றின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதற்கும் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

3. ஒட்டுமொத்த பொருளாதார மற்றும் நாணய—நிதி நிலைமையை ஸ்திரமாக்குவதும், சர்வதேச பொருளாதார உறவுகளை நீதியான, ஜனநாயக அடிப்படையில் மறுகட்டமைப்பு செய்வது பற்றிய ஐ. நா. தீர்மானங்களையும், முதலாகவும் முதன்மையாகவும் நாடுகளின் பொருளாதார உரிமைகள், கடமைகள் பற்றிய சாசனத்தையும் புதிய சர்வதேச பொருளாதார நியதியை ஸ்தாபிப்பது பற்றிய பிரகடனத்தையும், நடைமுறைப்படுத்துவதும் சர்வதேச பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கும் சர்வதேச பொருளாதார பந்தோபஸ்தை உறுதிப்படுத்துவதற்கும் ஆன மிக முக்கியமான முன்தேவைகளை உள்ளடக்கியுள்ளன. ஆயினும், சர்வதேச விவகாரங்களில் நன்கு பிரசித்தமான வட்டாரங்கள் பின்பற்றிவரும் அழிவுகரமான போக்கின் காரணமாக இவ்வேலைத்திட்ட தீர்மானங்கள் இன்னமும் நடைமுறைப் படுத்தப்படாமல் உள்ளன. அவற்றின் நடைமுறை முக்கியத்துவத்தைக் கேள்விக்குரியதாக்கவும் அவற்றை வழக்கொழிந்ததாக்கவும் முஸ்தீபுகள் செய்யப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதல் முனைப்பான உலகப் பொருளாதாரப் பிரச்னைகள் குறித்தும் சர்வதேச நாணய-நிதி மகாநாட்டைக் கூட்டுவது குறித்தும் ஐ. நா.வினால் ஒழுங்கு செய்யப்பட்ட ''உலகளாவிய பேச்சுக்களை'' நடத்துவது பற்றியும், பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டு நெறியை வகுப்பது, தொழில்நுட்பவியலை இடமாற்றங்கள் செய்வதை நெறிப்படுத்துதல் குறித்த பேச்சுக்களை நடத்துவது பற்றியுமான யோசனைகள் போன்று வளர்முக நாடுகளும் அணிசேரா நாடுகளும் சமர்ப்பித்துள்ள முன்முயற்சிகள் யாவும் நாடுகளின் சர்வதேச பொருளாதார பந்தோபஸ்தை உறுதிசெய்கின்ற நிலைமைகளை வகைசெய்யும் மார்க்கத்தில் அமைந்தவை. ஆயினும் இந்த முன்முயற்சிகளும் கூட இக்கட்டான நிலைக்கு உள்ளாகியுள்ளன.

சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவது, விருத்தி செய்வது பற்றிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதைத் தடுப்பது. ''பலதரப்புவாதத்தின் நெருக்கடி'' பற்றிய குற்றச்சாட்டுக்கள் மூலமும், பயனுறுதி வாய்ந்த பலதரப்புப் பேச்சுக்களை நடத்தவும், நாடுகளின் அரசியல் ஒருமைத்துவம் இல்லாத காரணத்தினால் பரந்த சமூக, பொருளாதாரப் பிரச்னைகளுக்கு ஸ்தூலமான பெறுபேறுகளைச் சாதிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையும் அதன் முகவர் நிறுவனங்களும் ஆற்றல் அற்றவையாக இருக்கின்றன என்பது மூலமும் மூடிமறைக்கப்பட்டு வருகின்றன.

முற்றியுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதைத் தவிர்த்துவிடுவதற்கும், தற்காலத்தின் அடிப்படையான பொருளாதார, சமூகக் கடமைகளுக்குத் தீர்வு காண்பதிலிருந்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை ஒதுக்கி வைப்பதற்கும் பயன்படுத்தப்படும் சூழ்ச்சியாகவே இவை யாவற்றையும் மதிப்பிட முடியும், வேறு எவ்விதமாகவும் அல்ல.

4. பொருளாதாரப் பிரச்னைகள் உள்ளிட்ட மனிதகுலத்தின் ஜீவாதார பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய செயலூக்கமுள்ள கருவியாக ஐக்கிய நாடுகள் சபையை சோவியத் அரசாங்கம் கருதுகிறது, சர்வதேச பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கும் மறுகட்டமைப்பு செய்வதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டில் மெய்யான முன்னேற்றம் இல்லாதிருப்பது குறித்து அது ஆழ்ந்த கவலை தெரிவிக்கிறது. சர்வதேச பொருளாதாரப் பந்தோபஸ்தை உறுதி செய்வதற்குத் தேவையான நிலைமைகளை உருவாக்குவதில் அரசியல் விருப்பத்தைக் காட்டுமாறு சோவியத் யூனியன் சகல நாடுகளையும் கேட்டுக் கொள்கிறது.

சர்வதேச பந்தோபஸ்து முழுவதிலும் ஒரு பகுதியாக விளங்கும் சர்வதேச பொருளாதார பந்தோபஸ்து பற்றிய கருத்தமைப்பு, [illegible]லாக, படைபலப் பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்தையோ, படைப்பலப் பிரயோக அச்சுறுத்தலை தலையோ கைவிடுவதையும், நாடுகளின் சட்டபூர்வமான உரிமைகள், நலன்களைப் பாதுகாப்பதையும் அவை மீறப் படாமல் இருக்கும் வண்ணம் நம்பகமான உத்தரவாதங் களை உருவாக்குவதையும் முன்வைக்கிறது.

சமாதானத்தை உறுதிசெய்வது, பூமியில் ஆயுதப் போட்டிக்கு முடிவுகட்டுவது மற்றும் விண்வெளிக்கு அதை மாற்றுவதைத் தடுப்பது, சர்வதேச நிலவரம் முழுவதை யும் உறுதியாக மேம்படுத்துவது, இணக்க அமைதிக் கொள்கைக்குத் திரும்புவது ஆகியவற்றுடன் நாடுகளின் பொருளாதாரப் பந்தோபஸ்து நேரடியாக இணைந்துள்ளது.

2000-வது ஆண்டுக்குள் நியூக்லியர் ஆயுதங்களைப் பூரணமாகவும் சர்வ வியாபகமாகவும் ஒழித்துக் கட்ட வும், சுய-அழிவு அச்சுறுத்தலிலிருந்து மனிதகுலத்தை விடுவிக்கவும், தற்கால மற்றும் வருங்காலத் தலைமுறை யினருக்கு நம்பகமான பந்தோபஸ்தை உறுதி செய்யவும் ஸ்தூலமான வேலைத்திட்டம் ஒன்றை 1986, ஜனவரி 15-ம் திகதி சோ. க. க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செய லாளர் மிகையில் கொர்பச்சேவ் விடுத்த அறிக்கையில் சோவியத் யூனியன் சமர்ப்பித்தது. படைக்குறைப்பின் நலன்களுக்காக செயல்பாட்டின் சகல முக்கியமான அம்சங் களையும் துறைகளையும் தழுவிய புதிய முன்முயற்சிகளின் தொகுப்பை நடைமுறைப்படுத்துவதும் அறிக்கையில் வகுத்துக் கூறப்பட்டுள்ளபடி நம்பிக்கையை மீண்டும் ஏற் படுத்துவதும் அமைதிபூர்வ வருங்காலத்திற்கும் அனைத்து மக்களதும் முன்னேற்றத்திற்குமான வாய்ப்புகளை ஊக்கு விப்பதும் மனிதகுலத்துக்கு கூடுதலான பந்தோபஸ்தை மாத்திரம் வழங்கவில்லை; ஆனால், மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்காகக் கூடுதல் செல்வாதாரங்களை ஒதுக்கவும் வாய்ப்பளிக்கின்றன.

இராணுவவாதம் பலவந்தமாகத் திணித்துள்ள அபி விருத்திக்குப் பதிலாக ஆயுதங்கள் என்ற கோட்பாடு, அபிவிருத்திக்காகப் படைக்குறைப்பு என்ற நேர்மாறான பிரமாணத்தினால் அகற்றப்பட வேண்டும்.

ஆயுதப் போட்டிக்கு முடிவுகட்டுவதும் நியூக்லியர் மற்றும் இரசாயன ஆயுதங்களை ஒழித்துக் கட்டுவதும் நாடுகளின் இராணுவச் செலவில் குறைப்புக்களைச் செய் வதும் ஆகவும் எதார்த்தமான, பயனுறுதி வாய்ந்த நிதி மார்க்கத்தைக் கொண்டிருக்கின்றன. இந்நிதி மார்க்கங் கள் வளர்முக நாடுகளின் பொருளாதார, சமூக தேவை களை நிறைவு செய்யவும் பின்தங்கிய பொருளாதார நிலைமையை வெற்றி கொள்வது, பசி, வறுமை, கொள்ளை நோய் மற்றும் பரந்த அளவிலான கல்வியறிவின்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழித்துக் கட்டுவது போன்ற மனிதகுலத்தின் உலகளாவிய பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும் விசை, மூலப் பொருட்கள் மற்றும் உணவுச் செல்வாதாரங்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் மனிதகுலத்தின் அதிகரித்துவரும் தேவைகளை நிறைவு செய்யவும் உலக மாகடலையும் புறவெளியையும் சமாதானபூர்வ நோக்கங்களுக்காகக் கண்டறியவும் மிக மிக அவசியமாக உள்ளன.

தேசிய சுதந்திரத்திற்கும் சுயாதீனத்துக்கும் மரியாதை உள்விவகாரங்களில் தலையிடாதிருத்தல், பாரபட்சங்களைக் கைவிடுதல், தம்முடைய பொருளாதார அமைப்புகளைத் தாமே சுயாதீனமாகத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்கு நாடுகளுக்குள்ள பராதீனப்படுத்த முடியாத சுயாதிபத்திய உரிமைகளைத் தவறாமல் கடைப்பிடித்தல் ஆகியன சர்வதேசப் பொருளாதாரப் பந்தோபஸ்தை உறுதி செய்வதற்கு அடிப்படையிலேயே முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

அரசுகளுக்கிடையிலான இடைத் தொடர்பானது, நிர்ப்பந்தமும் சட்ட விரோதமான தடைகள், பகிஷ்கரிப்புகள், வர்த்தக, கடன் மற்றும் தொழில் நுட்பவியல் தடைகள், அரசியல் நிர்ப்பந்தத்திற்காக பொருளாதாரத் தொடர்புகளைப் பயன்படுத்துவது ஆகியன இல்லாததாக இருக்க வேண்டும்.

சர்வதேச பொருளாதாரப் பந்தோபஸ்தை உறுதிப் படுத்துவதற்கான அவசியம் சர்வதேசப் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான செயல் வேலைத்திட்டமொன்றில் வலியுறுத்தப்பட்டது. இத்திட்டம் 1984 ஜூன் மாதம் மாஸ்கோவில் நடைபெற்ற ப.பொ.உ.க. உறுப்பினர்—நாடுகளின் பொருளாதார உச்சிநிலை மகாநாட்டில் முன்வைக்கப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சகல நாடுகளது அபிலாஷைகளையும் நலன்களையும் ஸ்தூலமாக நிறைவு செய்கிறது, வளர்முக நாடுகள் மெய்யான பொருளாதார சுதந்திரம் அடைவதற்குப் பங்களிக்கிறது.

சர்வதேசப் பொருளாதாரப் பிணைப்புகளை சகல விதமான பாரபட்சமுள்ள கட்டுப்பாடுகளிலிருந்தும், நாடுகளின் பொருளாதாரப் பந்தோபஸ்துக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் செயற்கையான ஏனைய எல்லா முட்டுக் கட்டைகளிலிருந்தும் விடுவிப்பதற்கு நடைமுறை நடவடிக்கைகளை எடுப்பது அவசியமென சோவியத் யூனியன் கருதுகிறது.

வளர்முக நாடுகள் மீது அரசியல் நிர்ப்பந்தத்தைக் கொண்டு வருவதற்குரிய ஒரு சாதனமாக பொருளாதார கட்டாயப்படுத்தலை மேற்கொள்வதைக் கண்டிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் சர்வதேச பொருளாதார உறவுகளில் நம்பிக்கையைப் பெருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் சர்வதேசப் பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஊக்குவிப்பதில் ஐக்கிய நாடுகள் சபையின் பாத்திரம் பற்றியுமான ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானங்களை நடைமுறையில் அமல் செய்வது மூலம் இதை ஊக்குவிக்க வேண்டும், புதிதாக விடுதலைபெற்ற நாடுகளில் தொடர்ந்தும் நவ-காலனியாதிக்கச் சுரண்டலை மேற்கொள்வதும் உலக வர்த்தகத்தையும் நாடுகள் மத்தியில் விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் சீர்குலைப்பதுமான பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாடுமீது பயனுறுதி வாய்ந்த கட்டுப் பாட்டை ஏற்படுத்துவது நாடுகளின் பொருளாதாரப் பந்தோபஸ்து நலன்களுக்கு அவசியமாக உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ஒத்துழைப்புக் கோட்பாடுகளைச் சகல நாடுகளும் கடைப்பிடிப்பதே இவ் விஷயங்களில் பிரதானமானது.

நாடுகளின் பொருளாதாரப் பந்தோபஸ்துக்குக் குழிபறிக்கின்ற எந்தவிதமான பாரபட்ச நடவடிக்கைகளையும் சர்வதேசப் பொருளாதார உறவுகளில் நிர்ப்பந்தம் மேற்கொள்வதையும் சோவியத் அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபை, இந்த எதிர்மறையான இயல்நிகழ்வுக்கு எதிராகத் தனது குரலை எழுப்பவும் அவற்றை ஒழித்துக்கட்ட ஸ்தூலமான நடவடிக்கைகளை எடுக்கவும் உரிய தருணம் வந்துவிட்டது.

அனைத்து நாடுகளதும் மக்களதும் சமூக, பொருளாதார முன்னேற்றத்தின் பயனுக்காக சர்வதேச பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது மற்றும் வளர்ப்பதற்கு முக்கியமானதோர் நிபந்தனையாக உள்ள சர்வதேசப் பொருளாதாரப் பந்தோபஸ்தை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை எடுக்குமாறு சோவியத் யூனியன் சகல நாடுகளையும் கேட்டுக்கொள்கிறது, தற்காலத்தின் அழுத்துகின்ற கடமையான இதை நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கிற, அதில் அங்கம் வகியாத சம்பந்தப்பட்ட சகல நாடுகளுடனும் ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பதற்கு சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி: சோவியத் சமுதாயத்தின் முன்னணிப் படை

# சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி: மக்களின் கட்சி

நொவஸ்தி செய்தி நிறுவனம் ''சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி: மக்களின் கட்சி'' என்ற நூலை வெளியிட்டுள்ளது. சோவியத் சமுதாயத்தின் அரசியல் முறையில் கம்யூனிஸ்ட் கட்சியின் இடம், பாத்திரம் ஆகியவற்றை விளக்கும் இந்நூலின் ஓர் அத்தியாயத்தைக் கீழே தருகிறோம்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் அரசியல் முறையின் மூலக்கருவாக விளங்குவதால் சோவியத் ஒன்றியத்தினது வளர்ச்சியின் பொது வாய்ப்பினை நிர்ணயிக்கிறது; அது மாத்திரமன்றி அரச அதிகார உறுப்புக்கள், சோவியத்துக்கள், ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கும் பொது ஸ்தாபனங்களின் பணிகளுக்கும் வழிகாட்டுகிறது, சோஷலிஸ மக்களாட்சியை உயர்த்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் திட்டமிட்ட இயல்பைக் கொடுக்கிறது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரம் பற்றிய அத்தகைய விளக்கம், ஏனைய சமூகச் சக்திகளதும் வர்க்கங்கள் அல்லது சமூகப் பகுதிகளின் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகள், உரிமைகளுக்ுச் சான்றுபகரவில்லை. குறிப்பாக, சோவியத் சமுதாயத்தின் சமநிலைப்பட்ட வளர்ச்சிக்கு உத்தரவாதமளிப்பதாகக் கட்சியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறது என்பதுதான் இங்குள்ள விஷயம். மக்களின் பொதுவான நலன்களையும் வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள் மற்றும் இனங்களின் திட்டவட்டமான தேவைகளையும் பொதுவான கொள்கையில் இசைவுபடுத்துவதும் பிரதிபலிப்பதும்தான் கட்சியின் பொறுப்பாகும். இவை இவ்விதம் இல்லாத பட்சத்தில் தற்காலிக நலன்களும் தனித்தனிக் குழுக்கள், தொழில்கள், மற்றும் பிராந்தியங்களின் நலன்களும் வெற்றி பெற்றுவிடும். சொல்லின் பரந்த பொருளில் சமூக நீதியை உத்தரவாதம் செய்வதாய் கட்சி விளங்குகின்றது என்பதால் இது நடைபெறுவதில்லை.

அவசியமாகும்போது சமகாலக் கொள்கை மீது அதிகாரபூர்வமான கட்டுப்பாட்டைச் செலுத்தவும் அதில் தலையீடு செய்யவுமான உரிமையைக் கட்சி பெற்றுள்ளது. அத்தகைய தலையீடு நிர்வாக உறுப்புக்களின் தீர்மானங்களை ரத்து செய்யவும் சட்டத்தின் மூலம் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஜனநாயக ரீதியிலான ஒழுங்கு விதிகளை மீறவுமான உரிமையை பொருள்படுத்தவில்லை. இது, சமகாலக் கொள்கையின் திட்டவட்டமான பிரச்னைகளைப் பகிரங்கமாக முன்வைக்கவும் அவற்றின் முக்கியத்துவத்தையும் அவற்றுக்குத் தீர்வுகாணும் மார்க்கங்களையும் விளக்கவுமான உரிமையாகும்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அந்தஸ்து முக்கியமான ஆளணிகளைத் தெரிவு செய்வதிலும் இடமமர்த்துவதிலும் அதன் பங்கேற்பை முன்வைக்கிறது. சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்பின் கீழ், ராஜ்ய மற்றும் பொருளாதார அமைப்புகளுக்கு அதிகாரிகளை நியமனஞ் செய்வது சோவியத்துக்களின் அதிகார வரம்பிற்குள் வருகிறது. ஆயினும் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த இவ்விஷயத்தில் ஒதுங்கி இருக்கமுடியாது என்பது இயல்பானதாகையால், அது தனது பரிந்துரைகளை வழங்குகிறது.

நாட்டின் அரசியல் அமைப்பை மேம்படுத்துவதற்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இப்போது பெரும் முயற்சிகளைச் செய்து வருகிறது. இக்குறிக்கோளை அடைவதற்கான ஒரே மார்க்கம் சோஷலிஸ ஜனநாயகத்தை வளர்ச்சியுறச் செய்வதுதான். பொது விவகாரங்களைக் கையாள்வதில் உழைக்கும் மக்களின் பங்கேற்பை விரிவுபடுத்துவது சோஷலிஸ அரசியல் அமைப்பை விருத்தி செய்யும் முதன்மையான கடமை என்றால், நிர்வாகத்தையே முழு நிறைவாக்குவது இரண்டாவது கடமையாகும்.

அக்டோபர் சோஷலிஸப் புரட்சி வாகை சூடியதன் பின்னரான ஆரம்ப நாட்களில் ருஷ்யாவின் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் லெனின் விண்ணப்பம் விடுத்தார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள்தான் ராஜ்யத்தின் உச்ச மட்டத்தில் இருக்கிறீர்கள் என்பதை இப்போது நினைவிற் கொள்ளுங்கள்'' என்றார் அவர். மக்களின் திட்டவட்டமான அனுபவத்தில் அறிவார்ந்த அம்சத்தை லெனின் கண்டார்; இதுவே கட்சி, மிகவும் அதியவசரமான கடமைகளைச் சாதிக்க உதவியது. சோஷலிஸ ராஜ்ய நிர்வாகத்தின் வடிவமான—சோவியத்துக்கள்தான் உழைக்கும் மக்களின் அத்தகைய உண்மையான வரலாற்றுச் சிறப்புமிக்கக் கண்டுபிடிப்புக்களில் ஒன்று. 1905ல் நடைபெற்ற முதலாவது ருஷ்யப் புரட்சியின்போது ஆயுதந்தாங்கிய எழுச்சியை நெறிப்படுத்துவதற்காக தொழிலாளர்கள் இந்த உறுப்புக்களை உருவாக்கினர். இப்போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் தொழிலாளர் சோவியத்துக்களின் பாத்திரத்தை லெனினும் கட்சியும் அதியுயர்வாகப் போற்றினர். மேலும் சோஷலிஸ ராஜ்யத்துவத்தின் மிகச் சிறந்த வடிவம் சோவியத்துக்கள்தான் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். அம்முடிவுகள் முற்றிலும் சரியானவையே.

அரசாங்கத்தின் வடிவம் என்ற வகையில் சோவியத்துக்கள் பற்றிய விளக்கம் 1918ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ருஷ்ய சமஷ்டியின் அரசியல் யாப்பிலும் ஏனைய அங்கக் குடியரசுகளின் அரசியல் யாப்புகளிலும் சோவியத் ஒன்றியத்தின் 1924, 1936, 1977ம் ஆண்டு அரசியல் யாப்புகளிலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

சோவியத்துக்களில் இப்போது ஏறத்தாழ 23 லட்சம் பிரதிநிதிகள் உள்ளனர். இவர்கள் சோவியத் யூனியனின் ஒவ்வொரு சமூகக் குழுவையும் ராஜ்யத்தையும் தேசிய இனத்தையும் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். எமது நாட்டில் முழுநேரப் பிரதிநிதிகள் இல்லை. சோவியத் பிரதிநிதிகள் அனைவரும் தம்முடைய உழைப்பைக் கைவிட்டுவிடாமலேயே பிரதிநிதிக்குரிய தமது கடமையை மேற்கொள்கின்றனர். இதனால், அவர்கள் தமது சக-தொழிலாளர்களுடன் தொடர்ந்தும் தொடர்பு வைத்திருக்கின்றனர், வேறு வார்த்தையில் சொன்னால், அவர்களின் நடவடிக்கைகள் மீது இடையறாது கண்காணிப்புச் செய்யும் வாக்காளர்களுடன் தொடர்பு வைத்திருக்கின்றனர். சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்திலிருந்து உள்ளூர் அதிகார உறுப்புக்கள் வரையிலான எல்லா மட்டங்களிலுமுள்ள சோவியத்துக்களுக்கு இது பொருந்தும். பிரதிநிதியொருவர், தம்முடைய பணிப்புரைகளை நிறைவேற்றுவதற்குத் தவறினால், அல்லது அவரே சட்டத்தை மீறி நடந்தால் அவரைத் திருப்பி அழைக்கவும் அவருக்கு பிரதிநிதித்துவ அரசாணையை மறுக்கவுமான தமது உரிமையை சோவியத் வாக்காளர்கள் சோஷலிஸ ஜனநாயகத்தின் சாதனைகளில் ஒன்றாகக் கருதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயகம்-அபிவிருத்தியின் கருவி

கட்சி முழுவதையும் போலவே, ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் சோஷலிஸ ஜனநாயகம் அருவமானதல்ல, தன்னளவில் முடிந்துவிடுவதும் அல்ல என்று புகழ்பெற்ற லெனினிய ஆய்வைப் பின்பற்றுகிறார். அது அபிவிருத்தியினதும் பொருளாதார வளர்ச்சியினதும் கருவி, மக்களின் சமூக நடவடிக்கைகளுக்குத் தூண்டுதல் அளிக்கும் சாதனமாகும். அதிகார உறுப்புக்களில் மாத்திரமன்றி பரந்த வெகுஜன ஸ்தாபனங்களிலும்கூட கட்சியின் பணிக்கு வழிகாட்டியாக விளங்கும் கோட்பாடு இதுதான். தொழிற்சங்கங்கள் மட்டுமல்லாமல் கொம்சமோல், கூட்டுறவுச் சங்கங்கள், படைப்பாக்கத் தொழிலாளர்களின் சங்கங்கள் மற்றும் சோவியத் அரசியல் அமைப்பின் ஏனைய நிறுவனங்களும் உள்ளன—இவை யாவும் முற்றிலும் சுயவிருப்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனங்களாகும்.

உதாரணமாக, அரசு மற்றும் பொது விவகாரங்களைக் கையாள்வதில் பெரும் பாத்திரத்தை வகிக்கும் தொழிற்சங்கங்களில் 1360 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். இத்தொழிற்சங்கங்கள் அதிகாரிகளுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கை எதுவுமில்லாமல் அமைக்கப்படுகின்றன. இவை தமது சொந்தச் சட்டங்கள், விதிகளுக்கு ஏற்ப செயல்படுகின்றன; இவற்றை அதிகாரிகள் பதிவுசெய்ய வேண்டிய அவசியமில்லை; மேலும் நிர்வாகத்தின் தீர்மானம் மூலம் கலைக்கப்பட முடியாதவை. அரசியல் யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள சட்ட முன்முயற்சியைச் செய்யும் உரிமையைப் பயன்படுத்தி, அவை சுயாதீனமாகவே புதிய சட்டங்களை வரைகின்றன; அவற்றை சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்துக்குச் சமர்ப்பிக்கின்றன. இந்த நகல் சட்டங்கள் யாவும் உற்பத்தி, வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகள், பொழுதுபோக்கு, உடல்நலப் பராமரிப்பு மற்றும் சமூகக் காப்புறுதி பற்றிய பிரச்னைகளுடன் சம்பந்தப்பட்டவையாக இருப்பது ஓர் விதியாகும். கடந்த பத்து ஆண்டுகளின்போது 70க்கும் மேற்பட்ட ராஜ்ய சட்டங்களும் ஆணைகளும் தொழிற்சங்கத்தின் முன்முயற்சி பேரில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தொழிற்சங்க செல்வாக்கின் இயல்பான ''மண்டலம்'' உழைப்புக் கூட்டுக்களாகும். அவற்றின் உரிமைகளை பரவலாக்குவது சமுதாயத்தின் பாரிய அக்கறையாகும். இந்த உரிமைகள் யாவும் 1983ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட உழைப்புக் கூட்டுக்கள் பற்றிய சட்டத்தினால் கணிசமான அளவுக்கு வியாபிக்கப்பட்டுள்ளன; இச்சட்டம் மீதான நாடு தழுவிய விவாதம் 100,000க்கும் மேற்பட்ட கூட்டு மற்றும் தனிநபர் யோசனைகளையும் குறிப்புக்களையும் செய்தது. நகல் சட்டத்தின் விதிகள் சில, கணிசமான அளவுக்குத் திருத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட வேண்டியிருந்தது; ஏனையவை முழுமையாகவே மீண்டும் வரையப்பட வேண்டியவையாய் இருந்தன. இச்சட்டத்தை வரைவதில் மிகப்பெரும்பான்மையான மக்களின் பங்கேற்பு உண்மையிலேயே அதை கூடுதல் விரிவார்ந்ததாக்குவதற்கு உதவியது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ''அரசியலானது லட்சோப லட்சம் மக்களின் மெய்யான தலைவிதியையும்'' அவர்களின் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் சம்பந்தப்படுத்து கிறது என்ற லெனினின் கூற்றை எப்போதுமே கடைப் பிடித்து வந்துள்ளது.

உலகின் முதலாவது தொழிலாளர், விவசாயிகளின் ராஜ்யம் ஜனித்தது முதல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ சமுதாயத்துக்கு வழிகாட்டுவதற்காக மக்கள் தனக்குக் கொடுத்துள்ள உரிமையை ஊர்ஜிதப்படுத்தி வந்திருக்கிறது. ஏனெனில், சமுதாயம் முழுமையினதும் ஒவ்வொரு தனிநபரினதும் நலவாழ்வை எவ்வளவு சிறப்பாக உறுதி செய்ய முடியும் என்பதே தனது பணியின் பிரதான நோக்கம் என அது காண்கிறது. சோஷலிஸத்தின் இப் பொதுவான கோட்பாட்டை கட்சி நடைமுறைப்படுத் தியது; நாட்டினது வளர்ச்சியின் ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் தன்வசமுள்ள மெய்யான வாய்ப்புகள் மீது சார்ந்துநின்று நடைமுறைப்படுத்தியது. ஆனால், சோவியத் பிரஜைகளுக்கு உயர்ந்த வாழ்க்கை மற்றும் கலாசாரத் தரங்களை அளிப்பதற்குச் சாத்தியமான சகல முயற்சியை யும் செய்யவேண்டும் என்ற கோட்பாடு மாற்றமடையாமல் இருந்து வருகிறது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சமூகக் கொள்கை சோவியத் மக்களுக்கு எதிர்காலத்தின் மீது நம்பிக்கையைத் தருகிறது, அவர்களுடைய சமூகச் செயற்பாடுகள் மற்றும் நன்னம்பிக்கையுடன் வளர்ச்சிக்கு ஊற்றுக்காலாக விளங்கு கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி: கேள்வி-பதில்

**சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு, சோவியத் சமுதாயத்தின் வளர்ச்சியில் அதன் பாத்திரம் ஆகியன பற்றி எமது வாசகர்கள் கேட்டுள்ள முக்கிய மான கேள்விகளுக்கு இங்கு பதிலளிக் கிறோம்.**

**சோவியத் யூனியனில் ஒரேயொரு கட்சி மாத்திரம் இருப்பது ஏன்?**

சோவியத் யூனியனில் ஒரேயொரு கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரமே உள்ளது என்ற அம்சம் திட்டவட்டமான வரலாற்று நிலைமைகளால் விளக்கப் படுகிறது.

1917ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற சோஷலிஸப் புரட்சிக்கு முன்னர் ருஷ்யாவில் பல அரசியல் கட்சிகள் இருந்தன. அவற்றில் சில ஜாரிஸத்தைப் பகிரங்கமாகவே ஆதரித்தன. ஏனையவை சீர்திருத்த வாதக் கொள்கையைப் பின்பற்றின. பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் அசமத்துவத்தின் ஏனைய வகைகளை புரட்சிகரமான வழியில் ஒழித்துக்கட்டுவது மூலம் சமுதாயத்தைத் தீவிரமாக உருமாற்றும் குறிக்கோளை ஒரு கட்சி மாத்திரம், கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரம் வரித்துக் கொண்டது. கம்யூனிஸ்ட்டுகளின் வேலைத் திட்டம் பெரும்பான்மையான மக்களின் நோக்கங்களையும் அபிலாஷைகளையும் பிரதிபலித்தது.

கம்யூனிஸ்ட்டுகள் தொழிலாளி வர்க்கம் முழுமையினதும் நலன்களைப் பாதுகாத்தனர். குறிப்பாக விவசாயிகளில் ஒரு பகுதியினரது கருத்துக்களைத் தெரிவித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய ஜனநாயகச் சக்திகளும்—சோஷலிஸப் புரட்சியாளர்கள் கட்சியும் இடதுசாரி முதலாளித்துவ ஜனநாயகக் கட்சியும்—இருந்தன. சோஷலிஸப் புரட்சியாளர்களுடன் கூட்டாகப் பணிபுரிவதற்கு மறுப்பு தெரிவிக்காமல் அவர்களுடன் கூட்டணியை அமைத்துக் கொள்வது அவசியமென கம்யூனிஸ்ட்டுகள் நம்பினர்.

புரட்சியின் பின்னரும் கூட, இந்தக் கூட்டணியை தொடர்ந்தும் வைத்திருக்க கம்யூனிஸ்ட் கட்சி தயாராக இருந்தது. சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸில் தெரிவுசெய்யப்பட்ட ராஜ்ய அதிகாரத்தின் அதியுயர் வடிவமான அகில யூனியன் மத்திய நிர்வாகக் கமிட்டியில் கம்யூனிஸ்ட் கட்சி ஏகப்பெரும்பான்மையினராக இருந்தபோதிலும் கூட (62 கம்யூனிஸ்ட்டுகள், 29 இடதுசாரி சோஷலிஸப் புரட்சியாளர்கள், ஏனைய மூன்று கட்சிகளின் 10 பிரதிநிதிகள்), ஒரு கட்சி அமைச்சரவையை அமைக்க முடிந்தபோதிலும்கூட, அரசாங்கத்தில் சேர்ந்துகொள்ளுமாறு இடதுசாரி சோஷலிஸப் புரட்சியாளர்களுக்கு அது பரிந்துரை செய்தது.

கம்யூனிஸ்ட்டுகளுடன் சேர்ந்து கொள்வதற்குத் தயாராக இருந்த கட்சி உறுப்பினர்களின் நிர்ப்பந்தம் காரணமாக இடதுசாரி சோஷலிஸப் புரட்சியாளர்களின் தலைவர்கள் சோவியத் கொள்கையை நிறைவேற்றுவதற்கு வாக்குறுதியளிக்கும் யோசனையை ஏற்றுக் கொண்டனர். இக்கட்சியின் ஏழு உறுப்பினர்கள் அரசாங்கத்தில் சேர்ந்தனர்.

ஆயினும் கம்யூனிஸ்ட்டுகளின் சோஷலிஸ சீர்திருத்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் எண்ணம் சோஷலிஸப் புரட்சியாளர்களுக்குக் கிடையாது என்பது விரைவில் தெளிவாகியது. 1918 மார்ச் மாதம் கூட்டரசாங்கத்திலிருந்து விலகிய அவர்கள் அதே ஆண்டு ஜுலை மாதம் எதிர்ப்புரட்சியாளர்களுடன் சேர்ந்து மாஸ்கோவில் ஆயுதந் தாங்கிய கலகத்தை நடத்தினர்.

மேலைய வரலாற்றறிஞர்கள் சிலர் கூறுவதைப் போன்று சோஷலிஸப் புரட்சியாளர் கட்சியும் ஏனைய குட்டி பூர்ஷ்வா கட்சிகளும் பலவந்தமாக கலைக்கப்படவில்லை. அவர்கள் மக்கள் முன் ஐயுறவு நிலைக்கு உள்ளாகினர், அவர்களின் ஆதரவை இழந்தனர், அரசியல் அரங்கிலிருந்து வெளியேறினர். வரலாற்றுபூர்வ நிகழ்வுகளின் போக்கு நாட்டின் எதிர்காலத்துக்குக் கம்யூனிஸ்ட்டுகளைப் பொறுப்பாளியாக்கிற்று.

ஒரு-கட்சி முறை சோஷலிஸ சமுதாயத்தின் உள்ளார்ந்த அம்சமல்ல. ஒரு சில சோஷலிஸ நாடுகளில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, பல்கேரியா போன்ற வற்றில், பல கட்சி முறைகள் வெகுஜன முன்னணியின் கட்டமைப்புக்குள் செயல்படுகின்றன; இந்நாடுகளில் சோஷலிஸ நிர்மாணத்தை ஆதரிக்கும் ஜனநாயகக் கட்சிகளும் பொதுவாழ்வு ஸ்தாபனங்களும் இம் முன்னணிகளில் சேர்ந்துள்ளன. சோஷலிஸ நாடுகளிலுள்ள பல கட்சி முறைகள் முதலாளித்துவ நாடுகளின் பலகட்சி முறைகளுக்கு வித்தியாசப்படுகின்றன; சோஷலிஸ நாடுகளில் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகளே முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன.

**சோஷலிஸ நாடுகளில் பொருளாதாரப் பிரச்னைகள் ஓர் அரசியல் கட்சியினாலேயே தீர்மானிக்கப்படுவது ஏன்? பொருளாதார விஷயங்களைக் கையாளவேண்டியுள்ள உறுப்புக்களை அது ஒதுக்கித் தள்ளவில்லையா?**

அத்தகைய கேள்விகள் ஏன் எழுப்பப்படுகின்றன என்பதை ஒருவர் சுலபமாகக் காணலாம். சோஷலிஸமல்லாத நாடுகளில் தனியார் மூலதனத்தின் மூலம் உண்மையிலேயே ஆதிக்கம் செலுத்தப்படுகின்ற பொருளாதாரத்தையுடைய நாடுகளில் முதலாளித்துவ அரசியல் கட்சிகள் பொருளாதாரப் பிரச்னைகள் குறித்து நிலைப்பாடுகளை எடுக்கவே செய்கின்றன. ஆனால், தம்முடைய போட்டியாளர்களை விமர்சிப்பதற்காக பிரதானமாகத் தேர்தல் காலங்களில் இந் நிலைப்பாடுகளை எடுத்து, அதற்குரிய பரிகாரங்களையும் முன் வைக்கின்றன. ஆயினும் இப்பரிகாரங்கள் யாவும் பொதுவாகவே தேர்தல்கள் முடிந்தவுடன் கைவிடப்பட்டு விடுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சி மக்களின் தலைமைதாங்கும் சக்தியாக மாறியிருப்பதால் தொலை நோக்குள்ளதும் திட்டவட்டமானதுமான குறிக்கோள்களை முன்வைக்கிறது— சோஷலிஸ சமுதாயத்தை நிர்மாணிக்கவும் படிப்படியாக அதை கம்யூனிஸ சமுதாயமாக மாற்றவுமான குறிக்கோள்களை முன்வைக்கிறது. பொதுவான இந்த மூலப்பிரமாணத்தின் பின்னணியில் இருப்பது எது? பெருமளவு பணியாகும்: இதன் பொருள் ஒவ்வொரு தனிநபரினதும் பொருளாயத, கலாசாரத் தேவைகளை முழுமையாகத் திருப்தி செய்வதற்கான அடிப்படையை நிர்மாணிப்பதும், காலவோட்டத்தில், தனிநபரின் சர்வாம்ச வளர்ச்சிக்கான நிலைமைகளை உருவாக்குவதும் ஆகும். ஆனால், வலிமைமிக்க, ஆகவும் பயனுறுதிமிக்க பொருளாதாரம் இல்லாமல் இதைச் சாதிக்க முடியுமா?

பொருளியல், கம்யூனிஸ்டுகளுக்கு கூடுதல் ஆர்வந் தரும் கொள்கை என்று லெனின் சொன்னார், பொருளியல் தான் மிகவும் முக்கியமான அரசியல் என்பதையும் சேர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கொள்ள முடியும். பொருளாதார விஷயங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி பெரும் கவனத்தைச் செலுத்தி வருகிறது என்பது இயல்பானதே.

சோவியத் யூனியனில் கட்சியினதும் அரசினதும் கடமைகள் கண்டிப்பாக வேறுபடுத்தப்பட்டுள்ளன. சோவியத் அரசியல் அமைப்பின் மூலக்கரு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிதான். அது, சோவியத் யூனியனின் சமூக வளர்ச்சிக்குரிய பொதுவான வாய்ப்புகளையும் உள்துறை, அயல்துறைக் கொள்கை மார்க்கத்தையும் நிர்ணயஞ் செய்கிறது, மக்களின் ஆக்கபூர்வ பணிக்கு வழிகாட்டுகிறது, அப்பணிக்கு திட்டமிட்ட, விஞ்ஞான ரீதியில் ஆதாரப்படுத்தப்பட்ட உறுதிவாய்ந்த இயல்பைக் கொடுக்கிறது.

அரசும், அதன் அரச அதிகார உறுப்புக்களும் நிர்வாகமும் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்புக்கு இசைவாக, நாட்டினது வாழ்வின் சகல பிரச்னைகளையும் தீர்மானிக்கின்றனர். இவற்றுடன், கட்சியினுல் வகுக்கப்பட்டதும் ராஜ்ய திட்டங்கள், அரசாங்க வரவு-செலவு மற்றும் பிற தாக்கீதுகளில் உருவாக்கப்பட்டிருப்பதுமான ஒருங்கிணைந்த சமூக, பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்றன.

**கம்யூனிஸ்ட் கருத்துக்களை ஏறக்குறைய சோவியத் பிரஜைகள் அனைவருமே ஏற்றுக்கொள்கிருர்கள் என்ருல், அவர்களில் ஒரு கோடியே 90 லட்சம் பேர் மாத்திரமே கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாக இருப்பது ஏன்?**

நாட்டின் வயதுவந்த மக்கள் அனைவரையும் கட்சியில் சேர்த்துக்கொள்வது கம்யூனிஸ்ட் கட்சியின் நோக்கமல்ல. அது, தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாயிகளதும் அறிவுத்துறையினரதும் அரசியல் ரீதியில் ஆகவும் பிரக்ஞையுள்ள, செயலூக்கமான பிரதிநிதிகளை மாத்திரமே, அவர்களின் சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஐக்கியப்படுத்துகிறது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருப்பதற்கு அதன் வேலைத்திட்டத்தின் விதிகளையும் நெறிமுறைகளையும் அங்கீகரிப்பது மட்டும் போதாது. கட்சி ஸ்தாபனம் ஒன்றில் ஒருவர் செயலூக்கமாகப் பணிபுரிவதும் கட்சித் தீர்மானங்களை பயனுறுதியுடன் நடைமுறைப்படுத்துவதும் ஒருவரின் வேலைத்தளத்தில் முன் அணிகளில் இருப்பதும் அவசியமாகும்.

சமுதாயத்தின் வாழ்வில் கட்சியின் தலைமைதாங்கும் பாத்திரத்தின் வளர்ச்சியும் அதன் மதிப்பும் செல்வாக்கும் அதனது அங்கத்துவத்தைத் தன்னியல்பாக விஸ்தரிப்பது மூலம் சாதிக்கப்படுவதில்லை. மக்களின் ஜீவாதார நலன்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுசெய்யும் ஓர் அரசியல் பாதையே சமுதாயம் முழுமையினதும் நம்பிக்கையையும் ஆதரவையும் கட்சிக்கு உத்தரவாதம் செய்கிறது.

**சோவியத் சமுதாயத்தின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்வில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரசுகள் வகிக்கும் பாத்திரம் யாது?**

கட்சியின் காங்கிரஸ்தான் சோ. க. க.வின் அதியுயர் உறுப்பாகும். காங்கிரஸின் பிரதிநிதிகள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். குறிப்பாக, 27-வது காங்கிரசுக்கு 5,000 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இது, அனைத்து கட்சி ஸ்தாபனங்களதும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்கிறது, அதன் சமூக, தேசியக் கட்டமைவைப் பிரதிபலிக்கிறது. இவ்விதம் கட்சி முழுமையையும் காங்கிரஸ் பிரதிநிதித்துவம் செய்கிறது, அதன் கூட்டுத்துவச் சிந்தனையையும் சித்தத்தையும் ஆகவும் முழுமையாகத் தெரிவிக்கிறது. காங்கிரசின் தீர்மானங்கள் ஒவ்வொரு கட்சி ஸ்தாபனத்தையும் ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டையும் கட்டுப்படுத்துகின்றன. இக்காங்கிரஸ் ஆகக்குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவையாவது கூட்டப்படுகிறது, அது மத்தியக் கமிட்டி மற்றும் பிற மத்திய அமைப்புகளின் அறிக்கைகளைச் செவிமடுக்கிறது. காங்கிரஸ் ஆதாரக் கட்சித் தாக்கீதுகளில்—அதன் வேலைத்திட்டம் மற்றும் விதிகளில் திருத்தங்களைச் செய்து அங்கீகரிக்கிறது. அது கட்சியின் உள்துறை, அயல்துறைக் கொள்கைப் போக்கை வகுக்கிறது, நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்துடன் சம்பந்தப்பட்ட பாரிய பிரச்னைகளைப் பரிசீலனை செய்து முடிவுகளை மேற்கொள்கிறது.

ஒவ்வொரு காங்கிரசும் கட்சியினதும் அனைத்து சோவியத் மக்களினதும் வாழ்வில் முக்கியமான இடத்தை வகிக்கிறது. நாட்டின் வளர்ச்சியில் புதிய கட்டத்துக்குக் கட்டியம் கூறுகிறது. காங்கிரசுகள் ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் கட்சியின் மூலோபாயத்தையும் உபாயத்தையும் வகுத்துரைக்கின்றன.

புரட்சிகரப் போராட்டம், உலக வளர்ச்சியின் விரிவார்ந்த விஞ்ஞானபூர்வ பகுப்பாய்வு, சர்வதேச கம்யூனிஸ்ட், தொழிலாளி வர்க்க மற்றும் தேச விமோசன இயக்கங்கள் ஆகியவற்றின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்துவதன் அடிப்படையில், காங்கிரஸ் தாக்கீதுகள் மார்க்ஸிய—லெனினியத் தத்துவத்தை ஆக்கபூர்வமாக விருத்திசெய்கின்றன, புதிய முடிவுகளையும் ஆய்வுரைகளையும் கொண்டு அதை வளப்படுத்துகின்றன. சோவியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரசுகள் பெரும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தவை.

**கட்சி வேலைத்திட்டத்தை மீண்டும் வரைய வேண்டியதற்கான காரணம் என்ன?**

கட்சியின் வேலைத்திட்டம் கட்சியினது பிரதான சித்தாந்தவியல் தாக்கீது; கட்சியின் குறிக்கோள்களையும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான முறைகளையும் அது நிர்ணயிக்கிறது. 1903ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது காங்கிரசில் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது கட்சி வேலைத்திட்டத்தின் பிரதான கடமை முதலாளித்துவத்தைத் தூக்கிவீசுவதும் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பதும் ஆகும். இரண்டாவது வேலைத்திட்டம் (எட்டாவது காங்கிரஸ், 1919) சோஷலிஸ சமுதாயத்தை நிர்மாணிக்கும் கடமையை முன்வைத்தது. இக்கடமை 1950ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. மூன்ருவது கட்சி வேலைத்திட்டம் (22-வது காங்கிரஸ், 1961) கம்யூனிஸத்தை நிர்மாணிக்கும் கடமையை முன்வைத்தது; கம்யூனிஸத்தின் பொருளாயத, தொழில்நுட்ப ஆதாரத்தளத்தை உருவாக்கவும் சமூக உறவுகளை மறுகட்டமைவு செய்யவுமான கடமையை முன்வைத்தது.

1981ம் ஆண்டில் நடைபெற்ற சோ. க. கவின் 26வது காங்கிரஸ், அடுத்துவரும் காங்கிரசுக்காக கட்சி வேலைத்திட்டத்தை மறுபுனைவு செய்யும் கடமையை மத்தியக் கமிட்டியிடம் ஒப்படைத்தது. அது புதிய வேலைத்திட்டமல்ல. ஆனல், மூன்ருவது திட்டத்தின் சரிநேர்ப்படுத்தப்பட்ட பதிப்பு ஆகும். ஏனெனில் மூன்ருவது வேலைத்திட்டத்தின் கேந்திரக் கடமையான கம்யூனிஸ நிர்மாணம் அப்படியே இருக்கிறது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் மிகையில் கொர்பச்சேவ் 1985ம் ஆண்டின் அக்டோபர் முழுநிறைவுக் கூட்டத்தில் பின்வருமாறு கூறினர்: ''கடந்த கால் நூற்றண்டு காலத்தின்போது எமது நாட்டில் ஸ்தூலமான இயல்புள்ள தொலைநோக்குடைய பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அத்தகைய மாற்றங்கள் ஆழமான பகுப்பாய்வையும், சமகால மற்றும் நீண்டகால குறிக்கோள்களை வரையறுப்பதையும் அவற்றை அடைவதற்கான மார்க்கங்களை வகுப்பதையும் கட்சியின் ஒழுங்கமைப்பு, சமூக-பொருளாதார மற்றும் சித்தாந்தவியல் செயல்பாட்டுக்குப் புதிய அணுகுமுறைகளையும் அவசியப்படுத்தின. சர்வதேச நிலவரமும் கூட வேலைத்திட்டத்தில் கூடுதல் துல்லிதமான வழிகாட்டு நெறிகளை அவசியப்படுத்தின. வர்க்க மற்றும் சமூக அரங்கிலும், ராஜ்யங்களுக்கு இடையிலான உறவுகளிலும் சகல சர்வதேச உறவுகளிலும் சர்வவியாபக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான வடிவமாக சமாதானக் கோட்பாட்டை உறுதிப்படுத்தும் போராட்டத்தைச் சுற்றியும் இடம்பெற்றுவரும் சக்திகளின் அணிசேர்க்கையில் ஏற்பட்டுவரும் அத்தகைய மாற்றங்கள் குறித்து நாம் புதிய கருத்தமைப்பை வகுக்க வேண்டியிருந்தது.

''வேறு வார்த்தையில் சொன்னால், ஆற்றப்பட்ட, சாதிக்கப்பட்ட பணியின் பெறுபேறுகளைத் தொகுத்துரைப்பது மாத்திரமன்றி, மனிதனுக்காகவும் பூமியில் சமாதானத்துக்காகவும் தெளிவான, நன்கு ஆதாரப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தை வகுப்பதும் அவசியமாக இருந்தது.''

சமுதாய வாழ்வின் மிகவும் முக்கியமான தாக்கீதுகளைப் பகிரங்கமாக விவாதிப்பது சோவியத் ஜனநாயகத்தின் பாரம்பர்யமாகும். கட்சி தனது தாக்கீதுகளை கம்யூனிஸ்டுகளால் மாத்திரமன்றி, அனைத்து மக்களும் விவாதிப்பதற்காகவும் சமர்ப்பிக்கிறது. கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பை விவாதிப்பதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி -புள்ளி விபரங்கள்

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டமும் வெற்றிகளும் நிரம்பிய நீண்டதோர் பாதையைக் கடந்துவந்துள்ளது. அதன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் நாட்டின் வளர்ச்சியில் தீர்க்கமாகச் செல்வாக்குச் செலுத்தியுள்ளன, உலக வரலாற்றின் போக்கைத் தீவிரமாக மாற்றியமைத்துள்ளன. இம்மாற்றங்களின் முக்கியமான பலாபலன் சோவியத் ஒன்றியத்தில் வளர்ச்சியுற்ற சோஷலிஸ சமுதாயத்தை நிர்மாணிப்பதாகும்.

சோவியத் சமுதாயம் முன்னேக்கிச் செல்கையில் சமூக ரீதியிலும் அரசியல் ரீதியிலும் கலாசார ரீதியிலும் மேம்படுகையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்தோங்கி வருகிறது, வலிமைபெற்று வருகிறது. கீழேயுள்ள புள்ளி விபரங்கள் அளவு மற்றும் பண்புரீதியில் சோ. க. கவின் அங்கத்துவத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் காட்டுகிறது.

## சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களின் எண்ணிக்கை

(ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதலாம் திகதியன்று)

| வருடம் | கம்யூனிஸ்ட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1905 | 8,400 |
| 1907 | 46,000 |
| 1917 (மார்ச்) | 24,000 |
| 1917 (அக்டோபர்) | 350,000 |
| 1918 (மார்ச்) | 390,000 |
| 1924 | 472,000 |
| 1925 | 801,804 |
| 1930 | 1,677,910 |
| 1940 | 3,399,975 |
| 1941 | 3,872,465 |
| 1946 | 5,510,862 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1951 | 6,462,975 |
| 1956 | 7,173,521 |
| 1961 | 9,275,826 |
| 1966 | 12,357,308 |
| 1971 | 14,372,563 |
| 1976 | 15,638,891 |
| 1981 | 17,430,413 |

இன்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு கோடி தொண்ணூறு இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் நாட்டின் வயதுவந்த மக்களில் ஒன்பது சதவீதத்தினர்.

●

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் ஒன்றியத்தின் தொழிலாளி வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள் மற்றும் அறிவுத்துறையினரில் நேர்மையான, ஆகவும் பிரக்ஞையுள்ள பகுதியினரை உள்ளடக்கியுள்ளது.

## சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சமூகக் கட்டமைவு

(ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதலாம் திகதியன்று)

| ஆண்டு | தொழிலாளர்கள் | விவசாயிகள், (கூட்டுப் பண்ணை விவசாயிகள்) | சம்பளம் பெறுவோரும் பிறரும் |
|---|---|---|---|
| 1966 | 37.8 | 16.2 | 46.0 |
| 1976 | 41.6 | 13.9 | 44.5 |
| 1983 | 44.1 | 12.4 | 43.5 |

பின்வரும் அட்டவணை காட்டுவதைப் போன்று சோ. க. க.வின் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை (ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதலாம் திகதியன்று உள்ளபடி) தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

## சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பெண் உறுப்பினர்கள்

| ஆண்டு | '000ல் | மொத்த உறுப்பினரின் சத விதத்தில் |
|---|---|---|
| 1920 | 45 | 7.4 |
| 1966 | 2,549 | 20.6 |
| 1976 | 3,794 | 24.3 |
| 1983 | 4,689 | 27.4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிக்கு அனுமதிக்கப்படுவோரில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்கள்.

மேன்மேலும் அதிகமான இளம் மக்கள் இளம் கம்யூனிஸ்ட் கழகத்தின் மூலமாகக் கட்சியில் சேர்ந்து வருகின்றனர். 1966-1970க்கு இடையில் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களில் கம்யூனிஸ்ட் கழகத்தினர் 45 சதவீதம், இப்போது 73 சதவீதம்.

கம்யூனிஸ்ட் கட்சி தலைமுறைகளின் தொடர்ச்சியைச் சிகரப்படுத்துகிறது, புரட்சிகர மற்றும் உழைப்புப் பாரம்பர்யங்களை முன்னெடுத்துச் செல்கிறது. மகத்தான அக்டோபர் சோஷலிஸ புரட்சியைச் சாதிப்பதற்குத் துணை புரிந்தோரும் எதிர்ப் புரட்சியாளர்களையும் அந்நியத் தலையீட்டாளர்களையும் எதிர்த்துப் போராடி சோவியத் ஆட்சியைப் பாதுகாத்தவர்களும் சோஷலிஸத்தின் அடித்தளங்களை இட்டவர்களும் முதலாவது ஐந்தாண்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்களும் மகத்தான தேசபக்த போரில் (1941-1945) நாட்டைப் பாதுகாத்தவர்களும் வருங்கால கம்யூனிஸ சமுதாயத்தை நிர்மாணித்துவரும் இளம் தலைமுறையைச் சேர்ந்த கம்யூனிஸ்ட்டுகளும் கட்சி உறுப்பினர்களாக உள்ளனர்.

## வயது அடிப்படையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்கள்

(ஜனவரி 1, 1983-சதவீதம்)

| | |
|---|---|
| மொத்த அங்கத்தவர்கள் | 100.0 |
| 25 வயதுக்குக் குறைந்தவர்கள் | 6.4 |
| 26–30 | 11.2 |
| 31-40 | 20.8 |
| 41-50 | 25.4 |
| 51–60 | 21.1 |
| 60 வயதுக்கு மேற்பட்டோர் | 15.1 |

கம்யூனிஸ்ட்டுகளில் ஏறத்தாழ 75 சதவீதமானோர் பொருளாயத உற்பத்தியில் தொழில் செய்கின்றனர்; 8 சதவீதத்தினருக்கு அதிகமானோர் அரசு, கட்சி மற்றும் பொது ஸ்தாபனங்களிலும் நிர்வாகத்துறையிலும் உள்ளனர்; 16.5 சதவீதமானோர் விஞ்ஞானம், கல்வி, உடல் நலப் பாதுகாப்பு மற்றும் கலாசாரத் தொழிலாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு ஐந்தாவது அல்லது ஆறுவது பருத்துவரும் பட்டம் பெற்ற விஞ்ஞானத் தொழிலாளர்களில் அரை வாசிக்கு அதிகமானோரும் கம்யூனிஸ்ட்டுகள் ஆவர்.

●

அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பின்னர் சுமார் 7 சதவீதமான கட்சி உறுப்பினர்கள்தான் உயர்தர அல் லது இரண்டாந்தரக் கல்வியைப் பெற்றிருந்தனர். இன்று இவர்களின் எண்ணிக்கை 75 சதவீதமாகும்.

●

சோவியத் யூனியன் நூற்றுக்கும் அதிகமான தேசத் தவர்களும் தேசிய இனத்தினரும் வாழும் பல்தேசிய ராஜ்யமாகும். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தனது சித் தாந்தவியலிலும் சேர்க்கையிலும் கட்டமைவிலும் சோவி யத் ஒன்றியத்தில் வாழும் அனைத்து மக்களதும் ஐக்கியத் தைச் சிகரப்படுத்துகிறது.

## சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கட்டமைவு

*(1983, ஜனவரி 1)*

| | '000 பேர் | கம்யூனிஸ்ட்டுகளின் மொத்த எண்ணிக்கையில் சதவீதம் |
|---|---|---|
| மொத்த அங்கத்தவர்கள் | 18.118 | 100.0 |
| ருஷ்யர்கள் | 10.809 | 59.7 |
| உக்ரைனியர்கள் | 2.899 | 16.0 |
| பைலோருஷ்யர்கள் | 685 | 3.8 |
| உஷ்பெக்கியர்கள் | 429 | 2.4 |
| கஸாக்குகள் | 355 | 2.0 |
| ஜோர்ஜியர்கள் | 303 | 1.7 |
| ஆஜர்பைஜானியர்கள் | 305 | 1.7 |
| லிதுவேனியர்கள் | 135 | 0.7 |
| மோல்தேவியர்கள் | 98 | 0.5 |
| லத்வியர்கள் | 74 | 0.4 |
| கிர்கீசியர்கள் | 70 | 0.4 |
| தாஜிக்குகள் | 80 | 0.4 |
| ஆர்மேனியர்கள் | 273 | 1.5 |
| துருக்மேனியர்கள் | 69 | 0.4 |
| எஸ்தோனியர்கள் | 58 | 0.3 |
| ஏனைய இனத்தவரும் இனக் குழுக்களும் | 1,476 | 8.1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அங்கக் குடியரசுகளின் 14 கம்யூனிஸ்ட் கட்சிகளை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் அங்கமாகும், சர்வதேசப் படைப் பிரிவாகும். சோ.க.க.வின் பொதுவான அரசியல் பாதைக்கு ஏற்பவும் திட்டவட்டமான உள்ளூர் நிலைமைகளைக் கணக்கில் எடுத்தும் குடியரசுகளிலுள்ள கட்சி ஸ்தாபனங்கள் கட்சி, பொருளாதார மற்றும் பொதுவாழ்வு ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி நெறிகளை வகுக்கின்றன, ராஜ்யத் திட்டத்தின் நிறைவேற்றும் பற்றிய அரசியல் வழிகாட்டுதலை மேற்கொள்கின்றன, மக்கள் மத்தியில் அரசியல் கல்விப் பணியை நடத்துகின்றன.

●

ஆரம்ப கட்சி ஸ்தாபனங்கள் ஆதாரக் கட்சிக் கூறுகள் ஆகும். அவை கம்யூனிஸ்ட்களின் வேலைத் தளங்களில்—ஆலைகள், தொழிற்சாலைகள், நிர்மாணத் தளங்கள், அரசு மற்றும் கூட்டுப் பண்ணைகள், கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் மூன்று பேருக்குக் குறையாத கட்சி உறுப்பினர்கள் உள்ள இடங்களில்— உருவாக்கப்படுகின்றன. தற்போது 400,000க்கும் அதிகமான ஆரம்பக் கட்சி ஸ்தாபனங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகைபீல் பொல்சாகோவ்
வரலாற்றறிஞர்

# நாடுகள் மத்தியில் சமாதானம்-இதுவே மார்க்ஸியக் குறிக்கோள்

**கூர்மையாக உக்ரமடைந்துள்ள சர்வதேச நிலவரத்தின் பின்னணியில், போர் ஆபத்து அதிகரிப்பதற்கு யார் காரணம், போரை ஆதரிப்பது யார், சமாதானத்தை யார், எதற்காக ஆதரிக்கிறார் என்பதை அரசியல் ரீதியில் ஆர்வம் அற்றவர்கள் கண்டுகொள்வது சிரமமாக இருக்கும். இக்கேள்விகளுக்கான பதில்களை இக்கட்டுரை தருகிறது.**

''சோஷலிஸமும் யுத்தமும்: போரின்பால் ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மனோபாவம்'' என்ற லெனினின் நூல் போரும் சமாதானமும் பற்றிய பிரச்னைகள் குறித்த மார்க்ஸியக் கருத்துக்களை விளக்கிக் கூறும் சித்தாந்தப் படைப்புக்களில் ஒன்றாகும். இந்நூலிலும் முதலாம் உலகப் போரின்போது (1914-1918) எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதர நூல்களிலும் லெனின் போர்கள் பற்றிய மார்க்ஸியத் தத்துவத்தை விருத்தி செய்தார், ருஷ்ய மார்க்ஸிஸ்ட்டுகளின், மெய்யான சர்வதேசியவாதிகளின் நிலைப்பாட்டைத் தெளிவாக வகுத்துரைத்தார், சமுதாய வாழ்விலிருந்து யுத்தங்களை அகற்றிவிடக் கூடிய சமூக நிபந்தனைகளை எடுத்துக் காட்டினார். நாடுகள் மத்தியில் போர்களுக்கு முடிவு கட்டுவது, சூறையாடலுக்கும் வன்முறைக்கும் முடிவுகட்டுவது—இதுதான் எம்முடைய குறிக்கோள் என்று லெனின் எழுதினார்.

## யுத்தங்கள் எவ்வாறு எழுந்தன?

போர்கள் வரலாற்று இயல்நிகழ்வு என்று மார்க்ஸியம்-லெனினியம் கூறுகிறது. ஆதிகால கம்யூனின் காலத்தில் (இது பல்லாயிரமாண்டுகள் நீடித்திருந்தது) மக்கள் யுத்தங்களைத் தெரிந்திருக்கவில்லை.

உற்பத்தி வளர்ச்சி காரணமாக, உபரி பொருட்களை உற்பத்தி செய்வது சாத்தியமாகிற்று, வலியோர் மெலியோரைச் சுரண்டத் தொடங்கினர், தீய வழிகளில் செல்வத்தைக் குவித்தனர். உழைப்பை ஏனையோர் சுரண்டத் தொடங்கியமை உற்பத்திச் சாதனங்களில் தனிச் சொத்துடைமை தோன்றுவதற்கு இட்டுச் சென்றது. சமூக வன்முறை மற்றும் அசமத்துவத்தின் பொருளாதார ஊற்றுக்கண் இதுதான். தனிச்சொத்தின் ஸ்தாபிதத்தோடும் பகைமைத் தன்மை கொண்ட வர்க்கங்களின், ஒடுக்குவோர், ஒடுக்கப்படுவோர் என்ற வர்க்கங்களின் உருவாக்கத்தோடும் சுரண்டலாளர்களின் வர்க்க ஆயுதமாக அரசு தோன்றியது. அக்காலம் முதல் ஏனைய மக்களை அடிமைப்படுத்தவும் நாட்டிற்குள் தம்முடைய ஆதிக்கத்தை வலுப்படுத்தவுமான ஒரு கருவியாக சுரண்டலாளர்களுக்குப் போர்கள் பயன்படத் தொடங்கின. இவற்றுக்கு நேர்மாறான வகையில், அடிமைச் சொந்தக்காரர்களுக்கு எதிராக அடிமைகளும் நிலப்பிரபுக்களுக்கு எதிராக விவசாயிகளும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஆக்கிரமிப்புக்குப் பலியானவர்களும் நடத்திய கலகங்களும் யுத்தங்களும் இருந்தன.

போரின் தன்மையைப் புரிந்துகொள்வது என்பதன் பொருள், அதன் வர்க்க சாராம்சத்தை அம்பலப்படுத்துவதும் யுத்தங்களின் அரசியல் குறிக்கோள்களுக்கும் போரில் ஈடுபடும் வர்க்கங்கள், நாடுகளின் பொருளாதார நலன்களுக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுவதும் ஆகும் என்று லெனின் சொன்னார். சமூக-வரலாற்று இயல் நிகழ்வு என்ற வகையில் போரைப் பகுப்பாய்வு செய்வதற்கான வர்க்க அணுகுமுறைதான், போரின் சமூக இயல்பை மதிப்பீடு செய்வதில், அப்போரின் பாலான வெகுஜனங்களின் மனோபாவத்தில் மார்க்ஸிய-லெனினிய விஞ்ஞானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் பிரதான மூலப் பிரமாணமாகும். ஒரு போரை, ''அது இடம்பெறும் வரலாற்று நிலைமையில் வைத்துப் பார்க்க வேண்டும், இதன் அடிப்படையில் மாத்திரமே அப்போரின் பாலான எமது மனோபாவத்தை நாம் வரையறுக்க முடியும்'' என்று லெனின் எழுதினார்.

இந்த மூலப் பிரமாணத்தினால் வழிகாட்டப்பட்டே லெனின் ''சோஷலிஸமும் யுத்தமும்'' என்ற நூலை எழுதினார்.

## நீதியான போர்களும் அநீதியான போர்களும்

போர்களை, அவற்றின் வகைகளுக்கு ஏற்ப தரப் படுத்துவதும் அவற்றின் சமூக உள்ளடக்கத்தை இனங் காட்டுவதும் லெனினின் நூலில் மையமான இடத்தை வகிக்கிறது. போரின்பாலான எமது மனோபாவம், முதலாளித்துவ போர் எதிர்ப்பாளர்கள் (சமாதானத்தை ஆதரிப்பவர்களும் பரிந்துரைப்பவர்களும்), அராஜகவாதிகள் ஆகியோரின் மனோபாவத்திலிருந்து அடிப்படையிலேயே வேறுபடுகிறது என்று லெனின் சொன்னார். ''நாம் முன்னையவர்களிலிருந்து வேறுபடுகிறோம்; ஏனெனில், யுத்தங்களுக்கும் நாட்டிற்குள் நடக்கும் வர்க்கப் போராட்டத்துக்கும் இடையிலான தவிர்க்கமுடியாத தொடர்பைப் புரிந்து கொள்கிறோம்; வர்க்கங்கள் ஒழிக்கப்படாவிட்டால், சோஷலிஸம் உருவாக்கப்படாவிட்டால் யுத்தங்களை ஒழித்துக்கட்ட முடியாது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம்; உள்நாட்டுப் போர்களை, அதாவது ஒடுக்கும் வர்க்கத்திற்கு எதிராக ஒடுக்கப்படும் வர்க்கமும் அடிமைச் சொந்தக்காரர்களுக்கு எதிராக அடிமைகளும் நிலவுடைமையாளர்களுக்கு எதிராக நிலத்தில் வேலைசெய்வோரும், பூர்ஷ்வாக்களுக்கு எதிராக சம்பளம் பெறும் தொழிலாளர்களும் நடத்தும் யுத்தங்களை நாம் முற்றிலும் சட்டபூர்வமானதாய், முற்போக்கானதாய், இன்றியமையாததாய்க் கருதுவதாலும் நாம் அவர்களிலிருந்து வேறுபடுகிறோம்.''

பொதுவாகவே யுத்தமும் சமாதானமும் இல்லை என்றும், அவற்றை ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளில், குறிப்பிட்ட கால கட்டத்தின் பிரதான போக்குகள் மற்றும் மார்க்கங்களின் முகாந்திரத்தில் நோக்க வேண்டும் என்றும் லெனின் எடுத்துக் காட்டினார். ஏகாதிபத்திய சகாப்தத்தில், போர்களின் பிரதான வகைகள் முதலாவதாக, அநீதியான ஏகாதிபத்தியப் போர்களாகும்: இவற்றின் நோக்கம் ஏனைய நாடுகளையும் மக்களையும் வென்றடக்கி அடிமைப்படுத்துவதும் சோஷலிஸ, ஜனநாயக மற்றும் தேச விமோசன இயக்கங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசுக்குவதும் ஆகும். இரண்டாவதாக, நீதியான போர்கள். இவை, வெளித்தாக்குதலுக்கு எதிராகவும் மக்களை அடிமைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராகவும் மக்களைப் பாதுகாப்பது, நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ ஒடுக்குமுறையிலிருந்து உழைக்கும் மக்களை விடுதலை செய்வது, ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து காலனிகளையும் சார்பு நாடுகளையும் விடுவிப்பது, ஏகாதிபத்திடத் தாக்குதல்களிலிருந்து சோஷலிஸ ராஜ்யத்தைப் பாதுகாப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டவை.

லெனின் எடுத்துக் காட்டியதைப் போன்று, முதலாம் உலக யுத்தமானது சக்திமிக்க ஏகாதிபத்திய நாடுகள் மத்தியில் உலகை மறுபிரிவினை செய்யும் யுத்தமாக இருந்தது. இது மக்களுக்குச் சொல்லொணாத் துன்பத்தைக் கொண்டு வந்தது, பெரும் அழிவை ஏற்படுத்தியது, லட்சக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டது.

கூடுதல் அழிவுகரமான, நாசம் விளைவித்த இரண்டாம் உலகப் போரும் சர்வதேச ஏகாதிபத்தியத்தினால் தூண்டப்பட்டதாகும். யுத்தம் வெடிப்பதற்கான பொறுப்பு, யாவற்றுக்கும் மேலாக ஜெர்மனியிடமும் அதன் நேசசக்திகளான பாஸிஸ இத்தாலியிடமும் இராணுவவாத ஜப்பானிடமும்தான் இருந்தது என்பது வாஸ்தவமே. ஆயினும் சர்வதேச—ஏகாதிபத்தியம் முழுவதும் இரண்டாம் உலகப் போருக்கும் சோவியத் யூனியன் மீது தாக்குதல் தொடுப்பதற்கும் ஆயத்தம் செய்தது! என்பதை வரலாற்று உண்மைகள் பற்றிய லெனினியப் பகுப்பாய்வு காட்டுகிறது. அமெரிக்க மற்றும் பிற முதலாளித்துவ நாடுகளின் ஏகாதிபத்திய வட்டாரங்கள் ஜெர்மன் பாஸிஸத்துக்கு அரசியல் ஆதரவையும் விரிவான பொருளாதார, நிதி உதவியையும் அளிப்பதிலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருந்தன, அவை ஆக்கிரமிப்பாளனைத் தூண்டிவிட்டதுடன் சோவியத் யூனியனுக்கு எதிராகவும் அவனை மார்க்கப்படுத்தின. அவற்றின் பொதுவான நோக்கம் உலகின் முதலாவது சோஷலிஸ ராஜ்யத்தை நிர்மூலமாக்குவதும் முதலாளித்துவ அமைப்பின் சிதைவைத் தடுப்பதும் ஆகும்.

இந்த நூற்றாண்டில் ஏகாதிபத்தியச் சக்திகள் இரண்டு தடவைகள் உலகப் போர்களைக் கட்டவிழ்த்துவிட்டன; அதன்மூலம் தமது பொருளாதார, அரசியல் நோக்கங்களைச் சாதிப்பதிலும் தம்முடைய நிலையை மேம்படுத்திக் கொள்வதிலும் தம்முடைய தன்னல நோக்கங்களைப் பேணிக்காத்துக் கொள்வதிலும் நம்பிக்கை வைத்தன. ஏகாதிபத்திய முயற்சிகளாகத் துவங்கிய இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்கள் இரண்டும் அவற்றை நேரடியாகத் தொடங்கி யவர்களுக்குப் படுதோல்வியைத் தந்ததோடு மாத்திர மன்றி, ஒவ்வொரு யுத்தமும் நெருக்கடியைக் கொண்டு வந்தது. போர்களை உற்பவிக்கும் ஏகாதிபத்திய அமைப்பைப் பலஹீனப் படுத்தியது.

## ஏகாதிபத்தியம் மீண்டும் மூர்க்கமடைகிறது

துரதிருஷ்டவசமாக, வரலாறு மீண்டும் நிகழ்கிறது. கடந்த சில தஸாப்தங்களாக ஏகாதிபத்தியம் எண்ணற்ற பல ஸ்தலப் போர்களையும் ஆயுதப் மோதல்களையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. புதிய உலகப் போர் அச் சுறுத்தலை உருவாக்கி வருகிறது.

1980ம் ஆண்டுகளின் திருப்பத்தில், குறிப்பாக பிற்பகுதியில், சர்வதேச நிலவரம் தீவிரமாக மோச மடைந்தது. ஏகாதிபத்தியத்தின், பிரதானமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முனைப்பாகிவரும் ஆக்கிரமிப்புத் தன்மை மனிதகுலம் முழுவதற்கும் பெரும் அச்சுறுத்தலை விடுக்கிறது. இதற்கான இறுதி நோக்கங்கள் ஏகாதிபத் தியத்தின் பொருளாதார அடித்தளங்களிலும், சர்வ வல்லமை கொண்ட பன்னாட்டு ஏகபோகங்களின் வளர்ச்சியிலும் உலக முதலாளித்துவ அமைப்பின் நெருக் கடி ஆழமாவதிலும் இழந்துவிட்ட தமது நிலைகளை மீண்டும் பெறுவதற்கும், உலகில் முற்போக்கான மாற் றங்களைத் தடுத்து நிறுத்துவதற்குமான ஏகாதிபத்திய சக்திகளின் முஸ்தீபுகளிலும் உள்ளன. ரீகன் நிர்வாகமும் அதற்குப் பக்கபலமாக விளங்கும் போர் வெறிபிடித்த ஏகாதிபத்தியச் சக்திகளும் அமெரிக்கத் தலைமையை ஏற்றதன் பின்னர், அவை உலக முதலாளித்துவ நெருக் கடியிலிருந்து விடுபடுவதற்கான மார்க்கத்தை இராணுவப் பலத்தைப் பிரயோகிப்பதில் கண்டன.

## சோஷலிஸம்-சமாதானத்தின் வலிமைமிக்க காரணி

முதலாளித்துவம் தொடர்ந்து செயல்படுவதற்கு ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆயுதப் போராட்டம் பல தஸாப்தங்களுக்கு நடக்கும் சாத்தியப்பாட்டை லெனின் முன்னுணர்ந்தார். அவ்வேளையில், ஏகாதிபத்தியம் மாத் திரமே உலகளாவிய அமைப்பாக இருந்தது என்ற உண்மையிலிருந்து அவர் முன்சென்றார். ஆனால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் சோஷலிஸப் புரட்சி வெற்றி பெறுவது சர்வதேச நிலைமையைத் தவிர்க்கமுடியாதவாறு மாற்றியமைக்கும், உலகப் போர் களை ஒழித்துக்கட்டுவதற்குச் சாத்தியப்படுத்துகின்ற புதிய நிலைமைகளை உருவாக்கும் என்பதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சோஷலிஸம் வலிமைமிக்க சர்வதேச காரணியாகும். மனிதகுலத்தின் வளர்ச்சியிலும் அதன் வருங்காலத்திலும் அது செல்வாக்கு செலுத்துகிறது. மக்களின் பந்தோபஸ்துக்கு உத்தரவாதம் செய்வதாகப் பயன்படுகிறது. ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க மண்டலம் உணர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்குக் குறுகலடைந்துள்ளது; சுயாதிபத்திய நாடுகள், மக்கள் மீது தனது விருப்ப ஆணையைச் செலுத்துவதற்கு இப்போது ஏகாதிபத்தியம் குறைந்த வாய்ப்புகளையே பெற்றுள்ளது.

மனிதகுலத்துக்கான பிரதான அச்சுறுத்தல், வலிமைமிக்க ஏகாதிபத்திய ஏகபோகங்களால் ஊட்டி வளர்க்கப்படும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திலேயே விடுக்கப்படுகிறது.

மனிதகுலத்துக்கான இவ்வளவு பெரும் அச்சுறுத்தல் கடந்த காலத்தில் முன்னென்றும் இருந்தது கிடையாது. அதுபோலவே, போரைத் தடுக்கவும் உலக ஆதிக்கத்துக்கான புதிய முயற்சிகளுக்குக் கடிவாளமிடவும் இத்தகைய பெரும் சக்திகளை மனிதகுலம் ஒருபோதும் பெற்றிருந்ததில்லை. சோவியத் கூட்டமைப்பு நாடுகள், சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கம், சர்வதேச இணக்க அமைதிக்காகவும் படைக்குறைப்பு மற்றும் சமாதானத்துக்காகவும் இயக்கம் நடத்துகின்ற சகல வெகுஜன மற்றும் அரசியல் சக்திகளே இவற்றில் முதன்மையானவை.

சோஷலிஸத்தின் தலையாய நோக்கம் அனல் அணுப் போர் யுத்த அச்சுறுத்தலைக் குறைப்பதும், இறுதியில் முற்றாக ஒழித்துக் கட்டுவதும் ஆகும். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் லெனினிய சமாதானம் மற்றும் சமாதானக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுகின்றன. போரும் சமாதானமும் பற்றிய அழுத்தும் பிரச்னைகளைப் பகுப்பாய்வு செய்வதில் லெனினிய அணுகுமுறையானது, உலகப் போரைத் தடுப்பதற்கான போராட்டத்தில் நம்பகமான வழிகாட்டியாகும்.

ஜெனீவாவில் விடுக்கப்பட்ட சோவியத்-அமெரிக்கக் கூட்டறிக்கை நியூக்லியர் யுத்தத்தில் வெற்றிபெற முடியாது, அப்போரில் ஈடுபடவும் கூடாது என்று கோடிட்டுக் காட்டுகிறது. விண்வெளியில் ஆயுதப் போட்டியைத் தடுப்பது, பூமியில் அதை நிறுத்துவது, நியூக்லியர் ஆயுதங்களைக் கட்டுப்படுத்திக் குறைப்பது, கேந்திர முன்முயற்சியை அதிகரிப்பது ஆகிய கடமைகளைச் சாதித்ததாக வேண்டும்.

''பொலிட்டிச் செஸ்கோயே சமூரசாவோன்யே''
சஞ்சிகையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீஸ் மொகமட்
ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி
மத்தியக் கமிட்டியின்
பொதுச் செயலாளர்

# லெனின் பற்றிய சிந்தனைகள்

இரண்டாம் உலகப் போர் மூண்டது. நான் புரட்சிகரக் கருத்துக்களை முதலில் அறிந்து கொண்ட போது எனக்கு 18 வயதுகூட ஆகவில்லை. நாடுகளின் நாஜி—விரோதக் கூட்டணிக்குத் தனது ஆதரவை ஈராக் முறையாகத் தெரிவித்திருந்த போதிலும்கூட, சோவியத் யூனியன் பற்றிய எந்தவிதமான ஸ்தூல மான பிரசுரங்களுக்கும் மார்க்ஸியம் பற்றி குறிப்பிடு வதற்கும் அதிகாரிகள் இன்னமும் தடைவிதித்திருந்தனர். ஏனைய உண்மையான மார்க்கங்களைக் கண்டறிவது சுலப மான விஷயமல்ல. அவ்வேளையில், 1934ம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சி அதன் ஆரம்ப நிலையிலேயே இருந்தது, விஞ்ஞான சோஷலிஸத் தின் அடித்தளங்கள் பற்றியும் சோவியத் யூனியன் பற்றியும் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஈராக்கிய இளைஞரின் வேணவாவைத் திருப்தி செய்யும் விஷயங் களை அதனால் பிரசுரிக்கவும் விநியோகிக்கவும் முடியா மல் இருந்தது. ஹிட்லர் ஜெர்மனியினதும் அதன் நேச அணிகளதும் ஆகவும் வலிமைமிக்க யுத்த இயந்திரத் துக்கு முகங்கொடுக்கும் சோவியத் மக்களின் குறிப் பிடத்தக்க உறுதித்தன்மை பற்றியும், செஞ்சேனை தொடுத்த மரண அடிகள் பற்றியும், 1945 மே மாதம் பாஸிஸத்தின் மீது ஈட்டப்பட்ட மாபெரும் வெற்றி பற்றி யும்—இது எமது பிராந்தியத்துக்கும் கூட, சுதந்திரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலை வீசிற்று—சிறு சிறு தகவல்களையே நாம் பெற்றுக் கொண்டோம் (இந்த உன்னத ஆண்டில்தான் நான் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தேன்). இவ்வெற்றிகள் யாவும் போல்ஷிவிக்குகளது கட்சியுடன், லெனினுடன் பிரிக்கமுடியாதவாறு பிணைந்திருந்தன.

## லெனினும் கிழக்குலக மக்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க எதிர்காலமும்

முன்னைய கலோனியல் மற்றும் சார்பு நாடுகளின் கம்யூனிஸ்ட்டுகள் லெனினின் நினைவைப் பெரிதும் போற்றுகின்றனர். ஏனெனில், அவரது சித்தாந்தவியல் கண்டுபிடிப்புக்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் போராட்டத்துக்கு விலைமதிக்கவொண்ணுதவையாகும். உலக சோஷலிஸப் புரட்சியின் மிகப்பெரும் தோற்றுவாய்ப் பகுதி என்ற வகையில், தேச விமோசன இயக்கங்களின் புரட்சிகர இயல்பை அவர் கவனத்துக்குக் கொண்டு வந்தார்: அதேசமயம், ஏனையோர், புகழ்பெற்ற புரட்சியாளர்கள் கூட, அவற்றின் பிரம்மாண்டமான உருமாற்ற உள்ளாற்றலைத் தக்கமுறையில் போற்றுவதற்குத் தவறினர். ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கலோனியல் மற்றும் அரைக் கலோனியல் நாடுகளின் மக்கள் நடத்திவரும் போராட்டம் உலகப் புரட்சிகரப் போக்கில் வகித்துவரும் முக்கியமான இடத்தை அவர் விசேடமாக வலியுறுத்தினர்.

கலோனியல் மற்றும் சார்பு நாடுகளில் புரட்சிகர இயக்கத்தின் பெரும் முக்கியத்துவத்தை லெனின் சுட்டிக் காட்டினர்: அது மாத்திரமன்றி, தேச விமோசன இயக்கத்தின் கட்டமைவுக்குள் பணிபுரியும் பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஸ்தூலமான நிலைமைகளையும் அவர் வலியுறுத்தினர். முற்போக்குடனும் கலப்பு ''பூர்ஷ்வா ஜனநாயகத்''துடனும் தேசியக் கூட்டணிகளை ஸ்தாபிப்பதற்கான அரசியம் பற்றி பேசுகையில், கம்யூனிஸ்ட் கட்சிகள் அவற்றுடன் இரண்டறக் கலந்துவிடக் கூடாது என்றும் பாட்டாளி வர்க்க இயக்கம் அதன் கருநிலையில் இருந்தாலும்கூட எல்லாச் சூழ்நிலைகளிலும் அதன் சுயாதீனத்தை உயர்த்திப் பிடிக்கவேண்டும் என்றும் அவர் கோடிட்டுக் காட்டினர். ஆயினும் கூட, இன்றியமையாத நிலைமைகள் போதிய அளவுக்கு இல்லாமல் இருந்தால் அல்லது மறைந்து போயிருந்தால் அத்தகைய கூட்டணிகளில் பங்குபற்றுவது உசிதமானதல்ல என்று அவர் கருதினர். 1940ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தேசிய முன்னணி ஒன்றை அமைக்கவேண்டுமென எமது கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைகூவல் விடுத்த வேளையிலிருந்து தேசிய முன்னணி சம்பந்தமான சகலவற்றிலும் பரந்த கூட்டணிகளின் முற்போக்கு மற்றும் புரட்சிகர இயல்பினது பரிமாணத்தை மதிப்பீடு செய்வதில் லெனினின் மூலப்பிரமாணத்தினாலேயே நாம் வழிகாட்டப்பட்டோம். எம்முடைய அரசியல் நடைமுறை வாயிலாகவும் போராட்டத்திலான எமது அனுபவம் முழுவதாலும் லெனினது கூற்றுக்களின் சரியான தன்மையை நாம் இன்றைய நிலைமைகளிலும்கூட பரீட்சித்துள்ளோம்.

## அநீதியான போர்களும் லெனினின் நிலைப்பாடும்

எந்தவொரு பிரச்னையும் முதலில் எவ்வளவு சிரமமானதாகவும் வெகுஜன ஆதரவை பெறமுடியாததாகவும் இருந்தாலும்கூட, அது குறித்து லெனின் கோட்பாட்டு நிலையிலிருந்து வேறுபடாத நிலைப்பாட்டை எடுத்தார் என்பதிலேயே அவரின் மேதாவிலாசம் தங்கியுள்ளது. உதாரணமாக, பிற்போக்கான, அநீதியான போர்களின்பாலான புரட்சிகர வர்க்கத்தினதும் அதன் கட்சியினதும் மனோபாவம் பற்றிய பிரச்சினையை எடுத்துக்கொள்ளுங்கள். ஆளும் முதலாளித்துவக் குழுக்கள், பிற்போக்கான போரில் தமக்கு ஆதரவளிக்க எந்த நிலைப்பாட்டையும் ''தேசியத் துரோகம்'' என்றே விளக்குகின்றன என்று லெனின் சுட்டிக்காட்டினார். ''தாயகத்தின் பாதுகாப்பு'' என்ற கோஷத்தின் கீழ் அவை குட்டி பூர்ஷ்வாக்களைத் துன்புறுத்தவும் போரை ஆதரிப்போரின் முகாமுக்குள் மக்களை ஈர்த்தெடுப்பதற்காக அவர்களைத் தவறாக இட்டுச் செல்லவும் விழைகின்றன. இந்தக் கோஷத்தைக் கடைப்பிடிக்கும் அவை, ''வர்க்க சமாதானத்துக்கு'' அறைகூவல் விடுக்கின்றன, அதன்மூலம், ''வெற்றியின் நோக்கத்துக்காக'' தனது வர்க்கப் போராட்டத்தை பாட்டாளிகள் கைதுறக்கச் செய்வதற்கு முயல்கின்றன. நாம் அநீதியான போர்களை உறுதியாக எதிர்க்கிறோம் என்பது மட்டுமல்ல; ஜனநாயகம், சமூக முன்னேற்றம் மற்றும் சோஷலிஸத்துக்காக எம்முடைய புரட்சிகரப் போராட்டத்தைத் தொடர்கிறோம் என்பதே லெனினின் ஆணையாகும்.

ஈராக்-ஈரான் போர் சம்பந்தமான எம்முடைய கட்சியின் நிலைப்பாட்டோடு அது நேரடியாகத் தொடர்புற்றிருப்பதாலேயே இப்பிரச்சினையை நான் குறிப்பிடுகிறேன். ஏகாதிபத்திய வட்டாரங்களின் துணையோடு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இந்தப் போரை, அதன் ஆரம்ப நாட்களிலிருந்தே ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்து வருகிறது. தேசிய, சமூக விடுதலைக்கும் பிராந்திய மற்றும் உலக சமாதானத்துக்கும் இது விடுக்கும் அச்சுறுத்தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. யுத்தத்தின் மூலம் ஏகாதிபத்தியமும் பிற்போக்குமே பயனடையும் என்றும், போரில் ஈடுபட்டுள்ள தரப்புக்களின் ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய மற்றும் பிராந்தியப் பிற்போக்கின் கொள்கைக்குச் சரணடைவதிலேயே முடியும் என்றும், பாரசீக வளைகுடா பகுதியில் தமது இராணுவ பிரசன்னத்தை வலுப்படுத்துவதற்கான முகாந்திரத்தை ஏகாதிபத்தியவாதிகளுக்கு, முதலாவதாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு வகைசெய்யும் என்றும் எமது கட்சி கோடிட்டுக் காட்டுகிறது. இப்போர் இரு நாடுகளுக்கும் மக்களுக்கும் பெரும் துன்பங்களையும் அழிவுகளையும் கொண்டுவரும் என்பதை ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியிருக்கிறது.

ஈராக்கியத் துருப்புக்கள் ஈரானின் பிரதேசத்திற்குள் ஆழ ஊடுருவியபோது, அவற்றை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்று ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சி கோரியது. ''வெற்றி''க்கு அறைகூவல் விடுத்தவர்களுடன் ஒத்துப்பாட அது மறுத்துவிட்டது. அத்தகைய ''வெற்றி'' ஏகாதிபத்திய மற்றும் பிற்போக்குச் சதித்திட்டங்களின் வெற்றியாகவே இருக்கும் என்று அது விளக்கிக் கூறியது. ஈராக்கிய இராணுவம் தனது எல்லைகளுக்குப் பின்வாங்கி, ஈரானிய ஆட்சியாளரின் சேனைக்கு எதிராகத் தற்காப்பு நிலையை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டபோது நீதியான ஜனநாயக அடிப்படையில் போரை உடனடியாக நிறுத்துவதற்கும், சேர்ப்புகள் இல்லாத சமாதானத்துக்கும் ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுத்தது. இப்போருக்கு எதிரான போராட்டத்தில், எம்முடைய நிலைப்பாடு ஆனது ஈரானின் தோழமைபூர்வ மக்கள் கட்சியின் நிலைப்பாட்டிலிருந்து வேறுபடவில்லை. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மெய்யான சாராம்சம் அத்தகையது தான். இப்பிரச்னையிலும் கூட லெனின் எமக்குப் போதித்தவாறே நாம் செயல்படுகிறோம்.

## லெனினுக்கு விசுவாசமாக

புரட்சிகர போராட்டத்துக்கு வழிகாட்டுவதில் அனுபவமுள்ள அரசியல் தலைவர்களின் பாத்திரத்தை மார்க்ஸியம் வலியுறுத்துகிறது, அடிப்படையான இரண்டு கோட்பாடுகளை இவர்கள் கடைப்பிடிக்காவிட்டால், தொழிலாளி வர்க்கத்தின் மெய்யான தலைவர்களாக அவர்கள் விளங்க முடியாது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த இரண்டு அடிப்படை கோட்பாடுகளும் பின்வருமாறு: (1) தாம் மக்களினதும் கட்சியினதும் விருப்பத்துக்கு அடிபணிய வேண்டும், எனவே அவர்களுக்குப் பொறுப்புடையவர்களாக இருக்கவேண்டும் என்பதை அவர்கள் எப்போதுமே மனதிற்கொண்டிருக்க வேண்டும்; (2) அவர்கள் தொடர்ந்தும் கூட்டுத் தலைமை முறைகளைப் பற்றியொழுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்; ஏனெனில் கூட்டுத்துவத்தைவிட அதியுயர்ந்த அறிவுடைமை வேறெதுவும் கிடையாது. லெனின் இதை உறுதியாக வலியுறுத்தினர். எந்தவொரு தனிப்பட்ட தலைவரையும், அவர் எவ்வளவு மகத்தானவராக இருந்தாலும்கூட, அவருடைய தகுதிகளின் பின்னுல் அணிதிரள்வதை அவர் எப்போதுமே கண்டித்தார். அவரைச் சொந்த முறையில் புகழ்பாடுவதற்கு இட்டுச் சென்ற எதையும் அவர் ஒருபோதும் சகித்துக் கொண்டது கிடையாது,

புரட்சியின் வரலாறு மகத்தான மக்கள் தலைவர்கள் பலரை அறியும்; இவர்கள் இவ்வரலாற்றில் குறிப்பிடத்தக்க பக்கங்களை எழுதியவர்கள், தம்முடைய மக்களுக்காகவும் மனிதகுலம் முழுமைக்காகவும் பெரும் சாதனை புரிந்தவர்கள். ஆனுல், உலகம் முழுவதிலுமுள்ள மக்களுக்காக லெனினைப்போல் சாதனை புரிந்தவர்கள் யார்?

''கொம்யூனிஸ்ட்''
சஞ்சிகையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம்,
—————————படைக்குறைப்புக்கான
வாய்ப்புகள்

வாதீம் ஸாக்லதீன்,
டி. எஸ்ஸி (தத்துவவியல்)

# சோவியத் சமாதான வேலைத்திட்டம்: அதன் சாராம்சமும் நடைமுறைப்படுத்தலும் முன்னேற்றமும்

1971 மார்ச் மாதம், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24–வது காங்கிரஸ் சமாதான வேலைத்திட்டம் ஒன்றை அங்கீகரித்தது. இது நீடிக்க அமைதிக்கும் வலுவான சர்வதேச பந்தோபஸ்துக்கும் பேரச்சுறுத்தலை இல்லாதொழிப்பதற்குமான வேலைத்திட்டமாகும். அதன் பிறகு 15 ஆண்டுகள் கழிந்துவிட்டன, உலக அரங்கில் பல மாற்றங்கள் நேர்ந்துள்ளன. சோவியத் சமாதான வேலைத் திட்டத்திலும் கூட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இவ் வேலைத் திட்டத்தில் மாற்றமடைந்திருப்பது எது; மாற்றமடையாமல் இருப்பது எது; அதை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பலன் தந்துள்ளனவா என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

## சமாதானம் பற்றிய ஆணையின் தொடர்ச்சி

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது—26வது காங்கிரசுகளின் சமாதான வேலைத்திட்டம் நம்பகமான அடித்தளத்தை— சமாதானத்தின் கொள்கையாக சோவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத் அயல்துறைக் கொள்கையின் அடிப்படையான லெனினியக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. இக்கோட்பாடுகள் சோஷலிஸ ராஜ்யத்தின் சமூக அமைப்பினது சாராம்சத்திலிருந்து முகிழ்கின்றன. சமாதானம் பற்றிய லெனினின் ஆணை 1917ம் ஆண்டின் அக்டோபர் புரட்சி வாகை சூடியதன் பின்னரான இரண்டாம் நாளில் அங்கீகரிக்கப்பட்டது முதல், சோவியத் அரசு சமாதானக் கொள்கையை முரணின்றி பின்பற்றி வந்துள்ளது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது—26வது காங்கிரசுகளில் அங்கீகரிக்கப்பட்ட சமாதான வேலைத்திட்டம் அடிப்படையிலேயே சமாதானம் பற்றிய லெனினின் ஆணையினது நியதியான தொடர்ச்சியாகும்.

## வேலைத்திட்டத்தின் உள்ளடக்கம்

சமாதான வேலைத்திட்டமானது எமது யுகத்தின் அடிப்படையான முரண்பாட்டின் பரிணாமம், எதிரெதிரான இரண்டு சமூக அமைப்புகளைச் சேர்ந்த நாடுகளுக்கிடையிலான உறவுகள் ஆகிய பிரச்னைகளை முக்கியமாக உள்ளடக்குகிறது. நியூக்லியர் யுத்தத்தைத் தடுத்து நிறுத்தும் வாய்ப்பும் மனிதகுலம் முழுமையினதும் எதிர்காலமும் இந்நாடுகளுக் கிடையிலான உறவுகளின் இயல்பு மற்றும் இயக்காற்றல் மீதே சார்ந்துள்ளன. எனவே, உலக சமாதானத்தைப் பேணிக்காத்து வலுப்படுத்துவது, மனிதகுலம் முழுவதினதும் நலன்கள் சம்பந்தப்பட்ட அதியவசரப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பது, மக்களின் சுதந்திரம், விடுதலை, பிற்போக்கான ஏகாதிபத்திய சக்திகளின் ஆக்கிரமிப்பு மற்றும் வெகுஜன விரோத செயல்பாடுகளினால் உற்பவிக்கப்பட்ட பிரச்னைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய அடிப்படை விஷயங்கள் ஆகியவற்றை இவ்வேலைத்திட்டம் வகுத்துரைக்கிறது.

இப்பிரச்னைகள் யாவை?

(1) ஆயுதப் போட்டியை, யாவற்றுக்கும் மேலாக நியூக்லியர் துறையில், நிறுத்துவது, ஆயுதக் குறைப்புக்களைத் துவங்குவது—சோவியத் ராஜதந்திரம் நியூக்லியர் ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்துவதையும், நியூக்லியர்-சூன்ய மண்டலங்களை உருவாக்குவதையும், அதைத் தொடர்ந்து நியூக்லியர், இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் ஆயுதங்களைப் படிப்படியாகத் தடைசெய்வதையும் அழித்துவிடுவதையும் யோசனையாகத் தெரிவிக்கிறது.

(2) இராணுவ மோதல்களுக்குத் தீர்வுகாண்பது, அவற்றின் அரசியல் தீர்வை ஊக்குவிப்பது, ஆக்கிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிப்பு மற்றும் நிர்ப்பந்த நடவடிக்கைகள் அனைத்தை யும் எதிர்ப்பது

(3) பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதில் வன்முறைப் பிரயோகம் செய்வதையோ, வன்முறைப் பிரயோக அச்சுறுத்தலையோ மேற்கொள்ளாமல் இருப்பது பற்றி சர்வதேச உடன்பாடுகளைச் செய்துகொள்வது.

(4) இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் உருவான பிரதேச மாற்றங்களை முடிவாக அங்கிகரிப்பது, இணக்க அமைதியை ஊக்குவிப்பது.

ஐரோப்பாவில் இராணுவக் குழுக்களைக் கலைப்பதை அல்லது முதல் நடவடிக்கையாக அவற்றின் இராணுவ ஸ்தாபனங்களைக் கலைப்பதை சோவியத் ராஜதந்திரம் பரிந்துரைக்கிறது.

(5) எஞ்சியுள்ள கலோனியல் ஆட்சிகளை ஒழித்துக் கட்டுவது, இனவாதத்தையும் இன ஒதுக்கலையும் எதிர்த்துப் போராடுவது பற்றிய ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது.

(6) நாடுகளுக்கிடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வளர்ப்பது, வியாபிப்பது.

## வேறுபடாத போக்கு

சோவியத் சமாதான வேலைத்திட்டம் பத்தாண்டு காலகட்டத்திற்கென வகுக்கப்பட்டது. 1970ம் ஆண்டுகளி லும் 1980ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் சோவியத் யூனி யன் இதே கொள்கை நோக்கங்களைப் பின்பற்றியது என்பது உண்மையே. அதன் நோக்கம் சமாதானத்தை வலுப்படுத்து வதும் மோதல் பரப்பைக் குறைப்பதும், ஆயுதப் போட் டிக்கு முடிவுகட்டுவதும் இணக்க அமைதியைப் பின்பற்று வதும் ஆழமாக்குவதும் ஆகும். ஏகாதிபத்திய ஆக்கிர மிப்புச் சக்திகள் தம்முடைய உபாயங்களை எவ்வளவுக்கு மாற்றினலும், சோவியத் யூனியன் இக்குறிக்கோள்களை ஒருபோதும் கைவிட்டதில்லை.

உலக நிகழ்வுகளின் பொதுவான போக்கை நிர்ணயம் செய்யும் ஸ்தூலமான போக்குகள் மாற்றமடையாமலேயே இருந்து வருகின்றன என்பதே உண்மை.

## உண்மையான பலாபலன்

சோவியத் சமாதான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளின் பலாபலன்கள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேலைத்திட்டத்தை முன்வைக்கையில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ், உலக சோஷலிஸத்தின் வலிமை, ஐக்கியம் மற்றும் இயக்காற்றல் மீதும், சகல முற்போக்கு மற்றும் சமாதானம் விரும்பும் சக்திகளுடனான தனது நெருக்கமான கூட்டணி மீதும் நம்பிக்கை வைத்து சர்வதேச உறவுகளில் திருப்பத்தைச் சாதிக்கவும், கெடுபிடிப் போரிலிருந்து மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வுக்கான திருப்பத்தைச் சாதிக்கவும், கொந்தளிப்பான பதற்றங்களிலிருந்து இணக்க அமைதிக்கும் மாமூலான பரஸ்பரம் பயனுள்ள ஒத்துழைப்புக்குமான திருப்பத்தைச் சாதிக்கவும் முயன்றது. பிரதானமாக, இக்குறிக்கோள் அப்போது அடையப்பெற்றது. இணக்க அமைதி தோன்றிய 1970ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் சர்வதேச உறவுகளின் வளர்ச்சியில் மெய்யான மாற்றம் காணப்பட்டது.

ஆயினும், 1970ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் உலக நிலவரம் மோசமடையத் தொடங்கியது. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகள், யாவற்றுக்கும் மேலாக அமெரிக்க ஆக்கிரமிப்புச் சக்திகள் பதற்றத்தையும் மோதலையும் தூண்டிவிடத் தொடங்கின. இது, சோ. க. கவின் 25-வது காங்கிரஸ் புதிய குறிக்கோளை முன்வைப்பதற்கு இட்டுச் சென்றது: "யுத்த ஆக்கிரமிப்புச் சக்திகளுக்குக் கடிவாளமிடவும், உலக சமாதானத்தை வலுப்படுத்தவும் மக்களின் விடுதலை, சுதந்திரம் மற்றும் சமூக முன்னேற்றத்துக்கான மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும் பாடுபடுகின்ற" அதேசமயத்தில், ஐந்தாண்டுகளுக்கு முன்னர் வகுக்கப்பட்ட கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதே இக்குறிக்கோளாகும். வேறுவார்த்தையில் சொன்னால், முன்னர் சாதிக்கப்பட்ட சாதகமுள்ள பெறுபேறுகளைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் ஸ்திரமான சகவாழ்வை உறுதிப்படுத்துவது என்பதே பிரச்னையாக இருந்தது.

1970ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 1980ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் "போர் அச்சுறுத்தலை அகற்றவும் இணக்க அமைதியை ஆழமாக்கவும் பேணிக்காக்கவும் பெரும்பாலான உலக நாடுகளுடன் பரஸ்பரம் பயனுள்ள ஒத்துழைப்பை வளர்க்கவும்" ஆன போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதே குறிக்கோளாக இருந்தது.

கடந்த காலத்தில் சோவியத் அயல்துறைக் கொள்கையின் அடிப்படை பலாபலன்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக, இக்காலகட்டத்தின்போது தொழிலாளி வர்க்கத்தின் ஆதாயங்களேயும் எமது நாட்டிலும் உலக சோஷலிஸ அமைப்பிலுள்ள சகல நாடுகளிலும் சோஷலிஸத்தின் ஆதாயங்களேயும் பாதுகாப்பதற்கு சோவியத் அயல்துறைக் கொள்கை பெரும் பங்களிப்பைச் செய்தது. சோஷலிஸ அயல்துறைக் கொள்கையை எதிரிடும் முக்கிய கடமையாக லெனின் இதை கருதினர்.

1970ம் ஆண்டுகளிலும் 1980ம் ஆண்டுகளின் துவக்கத்திலும் சோவியத் யூனியனுடையவும் சோஷலிஸக் கூட்டமைவு நாடுகள் முழுவதினதும் அயல்துறைக் கொள்கை, சோஷலிஸத்தின் நிலேகளேப் பாதுகாப்பதிலும் வலுப்படுத்துவதிலும் ஆகவும் முக்கியத்துவம் வாய்ந்த பெறுபேறுகளேச் சாதித்துள்ளது. உலக சக்திகளின் சமநிலே சோஷலிஸத்துக்குச் சாதகமாகத் தொடர்ந்தும் மாற்றமடைந்து வருவது மேலேய அரசியல்வாதிகள் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளே அங்கீகரிப்பதற்கு நிர்ப்பந்தித்துள்ளது. அவை ராஜ்யங்களுக்கிடையிலான பல தாக்கீதுகளில் ஏற்கனவே பதிவாக்கப்பட்டுள்ளன.

உண்மையில், இது சமாதான சகவாழ்வுக்கான போராட்டம் முடிந்துவிட்டது என்பதை பொருள்படுத்தவில்லே. அது தொடர்ந்தும் நடைபெறுகிறது.

இரண்டாவதாக, 1970ம் ஆண்டுகளில், ஏனைய சோஷலிஸ நாடுகளதும் அனேத்து சமாதான சக்திகளதும் அயல்துறைக் கொள்கையுடன் சேர்ந்து சோவியத் அயல்துறைக் கொள்கை உலக சமாதானத்தை வலுப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது.

மூன்ருவதாக, அனேத்து மக்களுடையவும் உரிமைகளேயும் நலன்களேயும், மூலாதாரமாக, அவர்கள் தமது சொந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதற்கும் பொருளாதார, அரசியல் சுதந்திரத்தையும் விடுதலேயையும் பெறுவதற்கும் ஆன பராதீனப்படுத்தமுடியாத உரிமைகளேயும் பாதிகாப்பதில் சோவியத் அயல்துறைக் கொள்கை மீண்டும் பெரும் பாத்திரம் வகித்துள்ளது.

நான்காவதாக, கடந்த ஆண்டுகளின் போது சமாதானம், ஜனநாயகத்துக்கான சகல சக்திகளுக்கும் உத்வேகமளிப்பதிலும் சமாதானத்துக்கான ஏகாதிபத்திய—விரோத போராட்டத்துக்குள் உலகம் முழுவதிலுமுள்ள பெரும் எண்ணிக்கையிலான மக்களே ஈர்த்தெடுப்பதிலும் சோவியத் அயல்துறை கொள்கை கணிசமான பாத்திரத்தை வகித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாகவும், ஐந்தாவதாகவும், நியூக்லியர் வெடிப்புக்கள் மீதான சோவியத் யூனியனின் ஒருதலைப் பட்சமான இடைநிறுத்தம், கேந்திர ஏவுகணைகளின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பது, ஐரோப்பாவில் நடுத்தர வீச்சு ஏவுகணைகள் ஈடுபடுத்தி வைப்பதை நிறுத்துவது போன்ற சோவியத் யூனியனின் பெருவீத முன்முயற்சிகளும் மற்றும் பிற முதலாளித்துவ நாடுகளிலும், உலகம் முழுவதிலும் போரும் சமாதானமும் பற்றிய பிரச்னைகளிலும் முதலாளித்துவ உலகுக்கும் சோஷலிஸ நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய பிரச்னையிலும் கணிசமான வேறுபாட்டினை ஏற்படுத்தியுள்ளன.

இவ்விதம், சமாதான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென வகுக்கப்பட்ட சோவியத் யூனியனின் நடவடிக்கைகள் சர்வவியாபக சமாதானத்தைப் பேணிக்காப்பதைச் சாத்தியமாக்கியுள்ளன, ஏகாதிபத்திய வட்டாரங்களின் திட்டங்களை முறியடிப்பதற்கு கணிசமாக உதவியுள்ளன. மறுபுறத்தில், மற்றுமொரு உலகப் போர் வெடிப்பதற்கு எதிராக சமாதானம் விரும்பும் நாடுகளதும் சமூக சக்திகளதும் முயற்சிகளை அது ஐக்கியப் படுத்தியுள்ளது.

''முனைப்பான பிரச்னை''
என்ற நூலிலிருந்து

மாயா குருவின்
தத்துவவியலாளர்

# சோஷலிஸ சமத்துவமும் சமூக நீதியும்

## சமத்துவம் குறித்து மார்க்ஸியம்-லெனினியம்

சமூக வாழ்வின் சகல துறைகளிலும் சமமான அந்தஸ்து, தனிநபரின் சுயாதீனமான வளர்ச்சிக்குரிய சமமான நிலைமைகளும் வாய்ப்புகளும் இருப்பது ஆகியனவற்றையே மக்களின் சமத்துவமாக மார்க்ஸியம்-லெனினியம் காண்கிறது.

மார்க்ஸியத்தின் சித்தாந்தவியல் எதிர்ப்பாளர்கள், மக்களின் நடவடிக்கைகளையும் அவர்கள் சுவைகளையும் கோரிக்கைகளையும் தரப்படுத்துவதாகவே சோஷலிஸ சமத்துவத்தைச் சித்தரித்துக் காட்டுகின்றனர். சமத்துவம் பற்றிய அத்தகைய கொச்சையான கருத்துக்கும் மார்க்ஸியத்துக்கும் தொடர்பில்லை. லெனின் சுட்டிக் காட்டியதைப்போன்று, "சோஷலிஸ்ட்டுகள் சமத்துவம் பற்றி பேசும்போது, அவர்கள் எப்போதுமே சமூக சமத்துவத்தையே பொருள்படுத்துகின்றனர், சமூக அந்தஸ்திலான சமத்துவத்தையே பொருள்படுத்துகின்றனர்; தனிநபர்களின் பௌதீக மற்றும் மனோவியல் சமத்துவத்தையல்ல."

சமூக சமத்துவம் பற்றிய மார்க்ஸிய—லெனினியக் கண்ணோட்டம், பிரதானமாக அதன் உள்ளடக்கம் பற்றிய விளக்கத்திற்கான அதனது வர்க்க அணுகுமுறையில் பூர்ஷ்வா கண்ணோட்டத்திலிருந்து வேறுபடுகிறது. சுரண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கங்களையும் சுரண்டப்படும் வர்க்கங்களையும் சேர்ந்த உறுப்பினர்கள் சமூக நீதி பற்றியும் சமத்துவம் பற்றியும் ஒரே தன்மையிலான விளக்கத்தைக் கொடுக்க முடியாது. சமத்துவத்தை ஆதரிக்கும் மார்க்ஸியம்— லெனினியம், சட்டத்தின்முன் பிரஜைகளின் சமத்துவத்தைக் கோருவதுடன் தன்னை வரம்பிட்டுக் கொள்வதில்லை. அது மெய்யான சோஷலிஸத்தின் ஸ்தாபிதத்தை உற்பத்திச் சாதனங்களில் தனிச் சொத்துடைமையையும் சமுதாயத்தை பகைமை சார்ந்த வர்க்கங்களாகப் பிரிவினை செய்வதையும் ஒழித்துக் கட்டுவதுடனும் இணைக்கிறது: இது புரட்சிகர மாற்றம் மற்றும் சோஷலிஸ நிர்மாணத்தின் போக்கில் இடம்பெறவுள்ளதாகும். மக்களாட்சியின் ஸ்தாபிதம், அரசியல் வாழ்வில் தாம் ஈடுபடுவதற்கான பரந்த வாய்ப்புகளை உழைக்கும் மக்களுக்கு வழங்குகிறது. இதில் சுரண்டலின் சகல வடிவங்களும் பால், தேசிய, இன, மத மற்றும் பிற வடிவங்களை அடிப்படையாகக் கொண்ட சகல சமூகக் குரோதங்களும் அழித்தொழிக்கப்படுகின்றன. சமூக உற்பத்தியின் அமைப்பில் அடிப்படையான சமூக அசமத்துவத்தை ஒழித்துக்கட்டுவது, பகைமைத்தன்மையற்ற சமூக-வர்க்கக் கட்டமைவுக்கும் சமுதாயத்தின் சமூக ஒரினத் தன்மைக்குமான அடிப்படையை வகைசெய்கிறது.

செய்யப்பட்ட வேலைக்கேற்ப விநியோகம் என்ற கோட்பாட்டை அரசு அமல் செய்வது சமூக சமத்துவத்தை அடைவதில் மிகப்பெரும் பாத்திரத்தை வகிக்கிறது. எனவே, சோஷலிஸத்தின் கீழ் மக்களின் சமத்துவம் பற்றிய கருத்து மெய்யான சமூக உள்ளடக்கத்தைப் பெற்றுள்ளது.

உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்த வரையில் சோஷலிஸ சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களும் சமமான நிலையில் உள்ளனர். அவர்கள் அனைவரும் பொதுவான சோஷலிஸச் சொத்தின் கூட்டுச் சொந்தக்காரர்கள் ஆவர். இது, பிரஜைகளின் பூரணமான, மெய்யான அரசியல் சமத்துவத்தை உறுதிப்படுத்துகிறது. சோஷலிஸ சமுதாயத்தின் அரசியல் அமைப்பு மற்றும் சோஷலிஸ நோக்கத்தின் வளர்ச்சியானது தமது சமுதாயத்தை நடத்திச் செல்வதில் உழைக்கும் மக்களின் செயலூக்கமான ஈடுபாட்டிற்குரிய முன்தேவைகளை உருவாக்குகிறது.

சமுதாயத்தின் உறுப்பினர்களது சமத்துவம் பற்றிய கோட்பாடு, அவர்களின் உரிமைகள் கடமைகளுடன் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டுள்ளது. ''எம்மைப் பொறுத்தவரையில் சமமான கடமைகள் ஆனது, பூர்ஷ்வா ஜனநாயக சமவுரிமைகளுக்கும் அவற்றின் குறிப்பிடத்தக்க அளவு விசேடமான பூர்ஷ்வா வரம்பை ஒழித்துக்கட்டுவதற்கும் மேலாக குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு சமூக போக்குகள்

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத் ராஜ்யத்தினதும் சமூகக் கொள்கை மக்களின் வாழ்க்கை மீதும் தனிநபரின் வளர்ச்சி மீதும் பொருளாயத அசமத்துவத்தின் தாக்கத்தை—தவிர்க்கமுடியாத வகையில் சோஷலிஸத்தின் கீழ்—குறைக்கும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்க அளவு முக்கியமானது சமூகப் பயனீட்டு நிதிகள் ஆகும். அதாவது, செய்யப்பட்ட வேலைக்கு மேலதிகமாக சமுதாய அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் தேசிய வருமானத்தின் பகுதியாகும்.

நாட்டின் பொருளாதார உள்ளாற்றல் வளர்ச்சியடைவதுடன் இந்நிதிகளும் துரிதமாக வியாபிக்கின்றன. அதே சமயத்தில், மக்களின் சகல பகுதிகளது மெய் வருமானங்களை உயர்த்துவதற்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

மக்களின் வாழ்க்கைத் தரங்களில் துரிதமான உயர்வு சோஷலிஸத்தின் உள்ளார்ந்த தன்மைச் சிறப்பம்சமாகும். ஆயினும், பொருளாயத நலவாழ்வின் மட்டம் தனிநபரின் சமூக நிலைப்பாட்டுக்கு மூலப் பிரமாணமல்ல. வருமானத்தின் அளவு தனிநபரின் நுகர்வுப் பாணியில் மாத்திரமே வேறுபாடுகளை உருவாக்குகிறது, ஆனால், சமுதாயத்தில் தனிநபரின் அந்தஸ்தை எவ்விதத்தில் நிர்ணயிப்பதில்லை. முதலாளித்துவத்தின் கீழ் காணப்படும் அசமத்துவத்திலிருந்து சோஷலிஸத்தின் கீழ் காணப்படும் அசமத்துவத்தை அடிப்படையிலேயே வேறுபடுத்திக் காட்டுவது இதுதான்.

அதேசமயம், பூர்ஷ்வா பிரச்சாரம், முதலாளித்துவத்தின் கீழ் சமத்துவம் பற்றிய பிரச்னை வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டு வருகிறது என்று கோரிக்கை விடுக்கிறது. ஆனால் உண்மைகள் நேர்மாறானவை. சமூக வறுமையும் உரிமைகள் இல்லாமையும் இன்னமும் அங்கு கனிந்துள்ளன. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் 3 கோடியே இருபது லட்சம் மக்கள் தொழிலற்றவர்கள் என்று அதிகாரபூர்வமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் 44 சதவீதமான இளம் மக்கள் 25 வயதிற்குக் குறைந்தவர்கள். அமெரிக்காவில் 11,000 குழந்தைகள் ஒவ்வொரு ஆண்டும் பட்டினியால் மரணிக்கின்றன. ஏழைகளின் மத்தியில் 35 வயதிற்குக் குறைந்தவர்களின் மரண வீதம் மக்களின் ஏனைய பகுதியினரைக் காட்டிலும் நான்கு தடவைகள் அதிகமானதாகும். முதலாளித்துவ நாடுகளில் இனப்பாரபட்சமும் பெண்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளும், குடியேறிய தொழிலாளர்களின் உரிமைகளும், மீறப்படுவதும் கைகோர்த்துச் செல்கின்றன. உழைக்கும் மக்கள் தம்முடைய வர்க்க வரம்புகளுக்கு அப்பால் வெளியேறிச் செல்வது மிகவும் சிரமமானதாகும்.

## சமத்துவம் மற்றும் நீதி பற்றிய கோட்பாடுகளின் வளர்ச்சி

கம்யூனிஸ சமூக—பொருளாதார உருவாக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் சமூக அசமத்துவத்தின் சகல வெளிப்பாடுகளையும் வெற்றிக் கொள்வது சாத்தியமானது என்று மார்க்ஸிய—லெனினிய நூல்கள் ஒருபோதும் கருதியது கிடையாது. கம்யூனிஸத்தின் கீழ், உழைப்பின் இயல்பில் அடிப்படையான வேறுபாடுகளை ஒழித்துக் கட்டுவதோடும், தேவைக்கேற்ப பங்கீடு என்ற கோட்பாட்டை அறிமுகஞ் செய்வதோடும்தான் இப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும் என்று அவை குறிப்பிட்டன. வாழ்வின் சகல துறைகளிலும் சோஷலிஸ சமத்துவம் மற்றும் சமூக நீதிக் கோட்பாடுகளை முரணின்றி நடைமுறைப்படுத்துவது மற்றும் வளர்ப்பது மூலமாக இந்த குறிக்கோளை அடைவதற்கு இன்னமும் பெரும்பணி ஆற்றவேண்டியுள்ளது.

சோஷலிஸ சமத்துவம் மற்றும் சமூக நீதி கோட்பாடுகளின் வளர்ச்சியும் நடைமுறைப்படுத்தலும் அக நிலைக் காரணிகளின் பரிபக்குவத்தின் மீதே சார்ந்துள்ளன; விசேடமாக, மாற்றமடையாத சமூகப் பெறுமானமாய் இக்கோட்பாடுகளை அவதானிக்கும் அவசியத்தையும் அவற்றை உறுதியாகப் பரிந்துரைப்பதற்கான திறமையையும் வெகுஜனங்கள் உணர்ந்து கொள்வதிலேயே சார்ந்துள்ளன. இக்கடமைகளைச் சாதிப்பதில் சோஷலிஸ ஜனநாயகத்தின் வளர்ச்சியும் விரிவாக்கமும் பாரிய காரணியாகும்.

''கொம்யூனிஸ்ட் சோவியஸ்த்கோய் லத்வீய்''
சஞ்சிகையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்
எவெக்னி போகுஷ்

# விடுதலை பெற்ற நாடுகளுடனான சோ.க.கவின் ஒத்துழைப்புப் பாதை

**சோ**வியத் யூனியன், முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த மக்களின் இயல்பான நண்பனாகும்: தமது சுதந்திரத்தை வென்றெடுத்த இம் மக்கள் நவ—காலனியாதிக்கத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான போராட்டத்தில் அதை வலுப்படுத்தி வருகின்றனர். முதலாளித்துவ சித்தாந்த வியலாளர்கள் கூறுவதைப் போன்று, இரண்டு உலக அமைப்புகளுக்கு இடையிலான மோதலில் தனது நலன்களுக்காக வளர்முக நாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு சோவியத் யூனியன் விரும்புகிறது என்பதை இது பொருள்படுத்தவில்லை. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் வரலாற்றின் சாதாரணமான பார்வையாளர்களாக இருந்த காலம் போய்விட்டது. அவர்கள் உலக விவகாரங்களில் செயலூக்கமான பாத்திரத்தை வகித்துவருகின்றனர் என்பதை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி உலகின் கவனத்துக்குப் பல தடவைகள் கொண்டு வந்துள்ளது. சோவியத் யூனியனுக்கும் இக்கண்டங்களைச் சேர்ந்த சுதந்திர நாடுகளுக்கும் இடையிலான சமதையான ஒத்துழைப்பு ஆனது உலக அரசியலில் அவற்றின் மதிப்பையும் செல்வாக்கையும் உயர்த்துவதற்குப் பெரும் பணிபுரிகிறது.

சமாதானம், விடுதலை, சுதந்திரத்துக்கான பற்றுதலும், மக்கள் மீதான ஆதிக்கம், சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் எந்த வடிவங்களுக்கும் காட்டும் வெறுப்பும்தான் பெரும்பான்மையான வளர்முக நாடுகளுடன் எம்மைப் பிணைக்கிறது என்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரசுகள் தமது தாக்கீதுகளில் சுட்டிக் காட்டியுள்ளன. இந்த அடிப்படை நலன்களின் ஒற்றுமையை அடித்தளமாகக் கொண்டே எம்முடைய ஒத்துழைப்பு வீச்சிலும் அளவிலும் வளர்ந்தோங்கி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு திசையமைவுகளைக் கொண்ட சுதந்திர நாடுகள் கலோனியல் அமைப்பின் சிதைபாடுகள் மீது தோன்றியுள்ளன. இவற்றில் சில, தமது விமோசனத்துக்குப் பின்னர் புரட்சிகர—ஜனநாயகப் பாதையை எடுத்துள்ளன. ஏனையவற்றில் முதலாளித்துவ உறவுகள் வேர்விட்டுள்ளன. சில, உண்மையிலேயே சுயாதீனமான கொள்கையைப் பின்பற்றுகின்றன; ஏனையவை ஏகாதிபத்திய சார்புடையவையாக இருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் நிலைமை சிக்கலானதே. சோவியத் யூனியன் விடுதலைபெற்ற ஒவ்வொரு நாட்டின்பாலும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கையைப் பின்பற்றுகிறது. இந்த அணுகுமுறை, ஒரு நாட்டிற்கும் மற்றொன்றுக்கும் இடையில் காணப்படும் முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ள சோவியத் யூனியன் விரும்புகிறது என்பது இதன் பொருளல்ல. இதன் நோக்கம் யாதெனில், ஒவ்வொரு நாட்டின் பால், அல்லது நாடுகளின் தொகுதியின்பால் செயலூக்கமான, ஸ்தூலமான அணுகுமுறையை எடுப்பதும், சமாதானம் மற்றும் சர்வதேச நட்புறவின் நலன்களுக்காக அவற்றுடன் வெற்றிகரமாக ஒத்துழைப்பதும் ஆகும். ஏகாதிபத்தியத்தின் ''பிரித்தாளும் கொள்கை''த் திசையில், ஒரு நாட்டை மற்றொன்றுக்கு எதிராக அமர்த்தும் திசையில் சோவியத் யூனியன் சமரசம் காணமுடியாத நிலைப்பாட்டை எடுத்துவந்துள்ளது.

விமோசனமடைந்த நாடுகள் சம்பந்தமான தனது அரசியல் பாதையை வகுக்கும் போது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு அடிப்படையான கோட்பாடுகளால் வழிநடத்தப்படுகிறது: இவை மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சக வாழ்வும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் ஆகும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு விடுதலை பெற்ற நாடுகளுடனும் வளர்முக உலகம் முழுவதுடனும் தனது உறவுகளை வளர்த்துக்கொள்ள சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஐந்து கோட்பாடுகளை வகுத்துக் கொண்டுள்ளது.

—தமது உள்விவகாரங்களை சுயாதீனமாகவும் வெளியார்த் தலையீடு இல்லாமலும் தீர்மானித்துக்கொள்ள ஒவ்வொரு தேசத்துக்கும் உள்ள உரிமையை அங்கீகரிப்பது; அவற்றின் மீது ஆதிக்கம் அல்லது மேலாண்மையின் எந்த வடிவங்களையும் ஸ்தாபிப்பதற்கு அல்லது எந்தவொரு வல்லரசினதும் ''நலன்கள் மண்டலத்தில்'' அவற்றைச் சேர்த்துக் கொள்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை நிராகரிப்பது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—இந் நாடுகளின் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் அவற்றின் எல்லைகளின் மீறவொண்ணுமைக்கும் முழு மரியாதை செலுத்துவது; இந்த நாடுகளைத் துண்டாடும் நோக்கமுடைய எந்தவொரு பிரிவினைவாத இயக்கங்களுக்கும் எந்தவிதமான வெளி ஆதரவும் கொடுக்காமல் இருப்பது;

—சர்வதேச விவகாரங்களில் ஒவ்வொரு ஆசிய, ஆபிரிக்க, லத்தின், அமெரிக்க நாடும் சமதையான அடிப்படையில் பங்கு கொள்ளவும் உலகின் எந்தவொரு நாட்டுடனும் உறவுகளை வளர்த்துக் கொள்ளவுமான உரிமையை முழுமையாக அங்கீகரிப்பது;

—இந்நாடுகளின் இயற்கைச் செல்வாதாரங்கள் மீது அவற்றுக்குள்ள சுயாதிபத்தியத்தை முழுமையாக அங்கீகரிப்பது, சர்வதேச பொருளாதார உறவுகளில் அவற்றின் முழுமையான சமத்துவத்தை அங்கீகரிப்பது; பொருத்தமான ஐ. நா. தீர்மானங்களுக்கு இசைவாக காலனியாதிக்கத்தின் எச்சசொச்சங்களை இல்லாதொழிக்கவும், இனவாதத்தையும் இனவொதுக்கலையும் ஒழித்துக் கட்டவுமான அவற்றின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது;

—பெரும்பான்மையான ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகள் தேர்ந்து கொண்டுள்ள அணிசேரா அந்தஸ்துக்கு மரியாதை செலுத்துவது; அந்நாடுகளை இராணுவ—அரசியல் முகாம்களுக்குள் ஈர்த்தெடுக்கும் முயற்சிகளைக் கைவிடுவது.

## செயலில் சர்வதேசியம்

இளம் நாடுகளுடனை சோவியத் யூனியனுன் உறவுகளது வர்க்க இயல்பு, ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் சமூக முன்னேற்றத்துக்காகவுமான அவற்றின் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் அதன் தயார்நிலையில் வெளிப்பாடு பெறுகிறது. இது, வளர்முக நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதற்கும் ''புரட்சியை ஏற்றுமதி செய்வதற்கும்'' ஆன முகாந்திரமாக சோவியத் யூனியன் பயன்படுத்துகிறது என்பதை பொருள்படுத்தவில்லை என்பது வாஸ்தவமே. சமூகப் புரட்சிகள் கட்டளைபேரில் நடைபெறுவதில்லை, ஆனுல், குறிப்பிட்ட நாடுகளது சமூக—பொருளாதார வளர்ச்சியின் இயல்பான பெறுபேறுகள் தான் அவை என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது. இது குறித்து லெனின் பின்வருமாறு கூறினர்: ''அயல்நாடு ஒன்றிலே, கட்டளைக்கு ஏற்ப, ஒப்பந்தத்தின் மூலம் புரட்சி வெடிக்க முடியும் என்று நம்புகின்றவர்களும் உள்ளனர்; இவர்கள் பைத்தியக்காரர்கள் அல்லது ஆத்திரத்தைத் தூண்டுபவர்கள்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் கூட அத்தகையவர்களைக் காணமுடிகிறது. மிகவும் திட்டவட்டமாகச் சொன்னுல், அமெரிக்க நிர்வாகத்தின் பிரதிநிதிகள் சோவியத்—விரோத, கம்யூனிஸ விரோத கட்டுக்கதைகளைப் பரப்புகின்றனர்: தேச விமோசன இயக்கங்கள் ''மாஸ்கோவின் கரத்''தினுல் வழிகாட்டப் படுகின்றன என்று குற்றஞ் சாட்டுகின்றனர். இதே பொய்கள் புதிய உருவத்தில் இப்போது கூறப்படுகின்றன; சோவியத் யூனியன் ''சர்வதேச பயங்கரவாதத்தில்''. சம்பந்தப்பட்டுள்ளதென குற்றஞ்சாட்டப்படுகிறது. இவ்விதம், அமெரிக்கத் தலைவர்கள், மக்களின் தேச, சமூக விமோசனத்திற்கான நியாயமான போராட்டத்தை பயங்கரவாதத்துடன் சமப்படுத்துகின்றனர்.

விடுதலை பெற்ற நாடுகளுடனுன சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒத்துழைப்பு ஆனது உறுதியானது, தற்காலிக மாறுபாடுகளுக்கு உட்படாதது. சோவியத் யூனியன் பின்வரும் பாரிய பிரச்னைகளுக்கு அவற்றுடன் கூட்டாகத் தீர்வுகாண்பதற்கு நோக்கம் கொண்டுள்ளது. போரைத் தடுப்பது; ஆயுதப் போட்டிக்கு முடிவு கட்டுவது, படைக்குறைப்புக்கு மாறிச் செல்வது; இருந்து வரும் மோதல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் தீர்வுகாண்பது, புதியவற்றைத் தடுத்து நிறுத்துவது; ஒவ்வொரு நாடும் தனது சொந்தப் பிரச்னைகள் மீது முயற்சிகளையும் செல்வாதாரங்களையும் குவிக்கவும், உலகளாவிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதில் ஏனைய நாடுகளுடன் ஒத்துழைக்கவும் சாத்தியப்படுத்துகின்ற நிலைமையை உருவாக்குவது ஆகியனவே இப்பிரச்னைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

## சோஷலிஸம்
## தத்துவமும் நடைமுறையும்

இம்மாத சஞ்சிகையைப் பெற
பின்வரும் முகவரிக்கு
எழுதுங்கள்:

சோஷலிஸம் தத்துவமும் நடைமுறையும்
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.

பிரகதி அச்சகம், 93, மாளிகாகந்த ரோட், கொழும்பு-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org